விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 133 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 17 செவ்வாய்க்கிழமை (30.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஜனாதிபதி ரணில் - மைத்திரி
## திடீரென இரகசியச் சந்திப்பு
### தென்னிலங்கையில் பரபரப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நேரில் சந்தித்து கலந்து ரையாடியுள்ளனர்.


ஜனாதிபதித் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் தென்னிலங்கை அரசியலில் இது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனது சொந்தத் தேவைக்காக ஜனாதிபதியைச் சந்தித்துள்ள அவர், அதன்போது சமகால அரசியல் நிலைவரம் குறித்தும் பேசியுள் 04



(கோப்புப் படம்)

### முன்னாள் எம்.பி
## ஈழவேந்தன் காலமானார்



15

### காங்கேசன்துறையில்
## மயங்கி விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையில் மயங்கி விழுந்த ஒருவர் மரணமடைந் 16

## இராணுவத்தினரின் தேவைக்காக கிளிநொச்சியில் காணி சுவீகரிக்க முயற்சி
### பொதுமக்கள் எதிர்ப்பையடுத்து காணி அளவீடு கைவிடப்பட்டது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் நாடு கிராம அலுவலர் பிரிவில் 21 குடும்பங்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத் தேவைக்கு சுவீகரிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவிருந்த அளவீட்டுப் பணிகள் பொதுமக்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆகியோரின் 15



## நாயாறு கடற்பகுதியில் காணாமல்போன குடும்பஸ்தர்
### நேற்று சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நாயாறு கடற்பகுதியில் நீராடச் சென்றபோது காணாமல்போன குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கொடிகாமம் மீசாலையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பாலசுந்தரம் பிரதீபன் (வயது-43) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு நாயாறு கடல் பகுதியில் நேற்று முன்தினம் ஐந்து பேர் கொண்ட குழுவினர் 15

### கட்டுநாயக்க விமான நிலையத்தில்
## முல்லைத்தீவைச் சேர்ந்த இரு பெண்கள், சிறுவன் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் முல்லைத்தீவைச் சேர்ந்த இரு பெண்கள், சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர், ஒரு சிறுவனுடன் இங்கிலாந்துக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளார்.

அவர்கள் கருமபீடத்துக்கு வந்தபோது, அவர்களின் ஆவணங்கள் தொடர்பில் அதிகாரிகளுக்கு 15

### மதுபோதையில் சாரத்தியம்
## வவுனியாவில் சாரதி கைது

(வவுனியா)

வவுனியா, ஏ9 வீதியில் மதுபோதையில் தனியார் பேருந்தை செலுத்திய சாரதி ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா, போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். 15

## மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு
### முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

ஐயங்கன்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இடிமின்னல் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மழை பெய்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மரத்தின் கீழே நின்றிருந்தவர்கள் மேலே இடி விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் ஐயங்கன்குளம் பகுதி 15

### இளம் தலைவர்களை ஒன்றிணைத்து
## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மீளக் கட்டியெழுப்பத் தயார்
### சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

இளம்தலைவர்களைஒன்றிணைத்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை மீளக் கட்டியெழுப்பவுள்ளதாக முன்னாள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க 16



## முல்லையிலிருந்து தென்பகுதிக்கு 44 மாடுகளை கடத்த முயற்சி
### 7 பேர் பொலிஸாரால் கைது

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவில் இருந்து பேருவளை மற்றும் கல்முனைக்கு இரண்டு லொறிகளில் 44 மாடுகளை கடத்திச் சென்ற ஏழு பேர் வவுனியா நகரில் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நீண்டகாலமாக 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவலைகள்...



அன்னை மடியில் 14 - 09 - 1941

இறைவன் அடியில் 01 - 04 - 2024

## அமரர் சுந்தரம் தனபாலசிங்கம்

அப்பா எனும் நாமத்துடன் எமை வளர்த்த எம் தந்தையே
உங்களைப் பிரிந்து மாதம் ஒன்று ஆனதே – ஆனாலும்
கண்முன்னே நிழல் ஆடுதப்பா உங்கள் முகம்
விழி நீர் கொண்டு நனைக்கின்றோம் உங்கள் நிழல் படத்திற்கு – இன்று
உங்கள் நினைவுகள் சுமந்த கனத்த மனதுடன்
வணங்குகின்றோம் ஆத்மா சாந்தியடைய.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


அந்தியேட்டி கிரியைகள் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிரியை நிகழ்வுகள் (30.04.2024) இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பலாலி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(0026)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



மலர்வு 17 . 01 . 1940

உதிர்வு 31 . 03 . 2024

கடந்த 31.03.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி
ஏழாலை தெற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட

## அமரர் கணேசரத்தினம் சரஸ்வதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.04.2024 திங்கட்கிழமை அன்று காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 30.04.2024 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 12.00 மணியளவில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(0036)

துர்க்கா ஸ்ரோர்ஸ்,
ஏழாலை தெற்கு.
சுன்னாகம்.

077 614 1764

இங்ஙனம்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 06 - 05 - 1937

உதிர்வு 29 - 04 - 2024

## கந்தசாமி அழகம்மா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் MS Lane கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி அழகம்மா அவர்கள் 29.04.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதி - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும் கமலநாதன், ரஞ்சிதானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமலர், இராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் கஜந்தன்(கஜன்), தர்ஷிகா, தக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2024 நாளை புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


M.S Lane, கோண்டாவில்
கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-0236)

# மரண அறிவித்தல்

## பொன்னையா நகுலாம்பிகை



தோற்றம் : 29.12.1929 மறைவு : 29.04.2024

பொன்னாலை மேற்கு சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரம் முத்துமாரி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நகுலாம்பிகை அவர்கள் பொன்னாலையில் நேற்று 29.04.2024 இறைபதம் எய்தினார்.

அன்னார் வேலணை கிழக்கு முத்துத்தம்பி - இராசம்மா தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற கந்தையா பொன்னையா (மாஷ்டர்) அவர்களின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம், கணேஷலிங்கம், மருதைய்யா (பஞ்சலிங்கம்) மற்றும் தியாகராஜா(கணக்காளர்), வசந்திமாலா(ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேதவல்லி, ஞானானந்தன்(ஜேர்மனி), சதானந்தன்(TCT), கலாவல்லி(கனடா), ஆனந்தவல்லி(மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை), கருணானந்தன், விவேகானந்தன்(UK), அருளானந்தன்(கனடா), காலஞ்சென்ற சிறிவல்லி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இரத்தினம்(ஓய்வு பெற்ற கிராம சேவகர்), மீரா(ஜேர்மனி), திருமகள், செல்வபாஷ்கரன்(கனடா), பவானி, பிரதீபா, வனஜா(UK), சிவகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் தாட்சாயணி - நிரஞ்சன்(மானிப்பாய் இந்துக் கல்லூரி, சிவா அரிசி ஆலை), உமணகேனன் - கஷ்தூரி(யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்), மந்தாகினி - சசிகரன்(பூநகரி முட்கொம்பன் மகா வித்தியாலயம், மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்), வைஷ்ணவி, சதுர்புஜன், நிலக்ஷன், சுலக்ஷன், பவித்திரா(ஜேர்மனி), உமேஷன், அபிராம், அபிஷன்(கனடா), சரணியா, கௌதமன், புவிதாஷ், சிந்துஜன், டிலக்சன்(UK), அர்ச்சனா, மாதேஷ்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் யேய்ராம், சர்வஜனன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (01.05.2024) நாளை புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவிலுக்கு அருகில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

[illegible] : 077 291 2656
[illegible] : 077 084 6349
உமணகேனன் : 077 340 0918

தகவல்:
குடும்பத்தினர்

(612)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

மே,11,12.2024.


# புகைத்தலுக்காக ஒரு நாளில் 52 கோடி செலவிடும் இலங்கையர்கள்

## மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவிப்பு

(கொழும்பு)

**நாட்டில் நாளொன்றுக்கு 52 கோடி ரூபாயை மக்கள் புகைப்பிடிப்பதற்குச் செலவிடுவதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.**

இதேவேளை இலங்கையில் 83 வீதமான மரணங்கள் தொற்றாத நோய்களினால் ஏற்படுவதாகவும், அவற்றில் புகைப்பிடித்தல் முக்கிய காரணங்களில் ஒன்றெனவும் உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக நாளொன்றுக்கு சுமார் 50 பேர் புகைப் பிடிப்பதனால் உயிரிழப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையில் வருடமொன்றுக்கு 2300 சிகரெட் வடிகட்டிகள் சுற்றுச் சூழலுக்கு வெளிவிடப்படுவதாகவும்போதைப்பொருள்தகவல் மையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தப்பிச் செல்ல முயன்றவர் கைது

(கொழும்பு)

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயற்சி செய்த பிரதான பாதாள உலக உறுப்பினர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், அங்கொட பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. அண்மையில் விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி அடையாள இயந்திரத்தின் மூலம் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (நி-6)

# இறப்பு வீதம் அதிகரிப்பு பிறப்பு வீதம் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் இறப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், பிறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சிவில் பதிவுகள் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் சட்டத்தரணி லக்சிக்கா கணேபொல தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக உரிய நேரத்தில் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியாமல், பல்வேறு நோய் நிலைமைகளுக்கு ஆளாகி மனநலப் பிரச்சினைகள் அதிகரிப்பது போன்ற காரணங்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2000ஆம் ஆண்டில், நாட்டில் ஆண்டுக்கு சராசரி இறப்பு எண்ணிக்கை 140,000ஆக காணப்பட்டது. அந்த எண்ணிக்கை தற்போது 180,000ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக பிறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. 2020ஆம் ஆண்டளவில், நாட்டில் ஆண்டு பிறப்பு எண்ணிக்கை சுமார் 325,000ஆக காணப்பட்டது.

இந்த நிலையில், அந்த தொகை தற்போது 280,000 வரை வீழ்ச்சியடைந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார். (நி-6)


சேவைநலன் பாராட்டும் பணி ஓய்வுநாள் வாழ்த்துக்களும்



திருமதி. யோ.லோகேஸ்வரி
SLTS-I

சேவை விபரம்
மு/உடையார்கட்டு ம.வி
1990.03.15-1995.01.08
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
1995.01.09-2008.01.01
மு/கொக்கிளாய் அ.த.க.பாடசாலை
2008.01.02-2010.10.24
மு/கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை
2010.10.25-2013.01.02
மு/முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்
2013.01.03-2014.01.05
மு/மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்
2014.01.06-2021.03.17
மு/கைவேலி கணேச வித்தியாலயம்
2021.03.18- 2024.04.30

எமது பாடசாலையில் கணிதபாட ஆசிரியராக கடமையாற்றி 30.04.2024 இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.யோ.லோகேஸ்வரி அவர்கள் ஓய்வு காலத்தில் மகிழ்வாக வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் கழகம், மு/கைவேலி கணேச வித்தியாலயம், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு.

(நி-0230)



மணிவிழா வாழ்த்து

திருமதி. கோணேஸ்வரி நித்தியபவான்
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி, கலைமாணி (BA). பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE))

சேவை விபரம்
யா/திருநெல்வேலி இ.த.க.பாடசாலை
26.03.1990-06.02.2005
யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை
07.02.2005-05.01.2006
யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை
06.01.2006-29.04.2024

எமது பாடசாலையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி 30.04.2024 இன்று மணி விழாக்காணும் திருமதி.கோணேஸ்வரி நித்தியபவான் அவர்களை சீரும்சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.



(சி-0231)

வாழ்த்துவோர்: யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை



சேவை நலன் பாராட்டு

திருமதி: யோகேஸ்வரன் யோசேப்பின் ஐடா

இலங்கை வங்கியில் 29 ஆண்டுகள் ஈடு இணையற்ற சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் எமது சக உத்தியோகத்தரை இறையாசியுடன் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.



(நி-0229)

முகாமையாளரும் ஊழியர்களும். இலங்கை வங்கி – கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 'சக்கரவர்த்தி' வருண்

- ஈடனில் கொல்கத்தாவுக்கு இனிப்பான வெற்றி
- டில்லியின் பிளே ஓப் வாய்ப்பு மங்கலானது



சுழலில் வருண் சக்ரவர்த்தி மிரட்ட, கொல்கத்தா அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று நடந்த ஐ.பி.எல்., போட்டியில் டில்லி, கொல்கத்தா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி அணித் தலைவர் ரிஷாப் பண்ட், துடுப் பாட்டத்தை தேர்வு செய்தார்.

**திணறல் ஆரம்பம்**

டில்லி அணிக்கு பிரேசர்(12), பிரித்வி ஷா (13) ஏமாற்றினர். அடுத்து "நடுத் தர வரிசையில்" களமிறங்கிய வீரர் களும் டில்லி அணியை கைவிட்டனர்.

ரிஷாப், அபிஷேக் போரல் ஜோடி சேர்ந்தனர். ஷாய் ஹோப் (6), ஒரு சிக்சர் மட்டும் அடித்து பெவிலியன் திரும்பினார். ஹர்ஷித் ராணா வீசிய ஐந்தாவது ஓவரில் மிரட்டிய அபிஷேக், 4, 6, 4 என அடுத்தடுத்து விளாச, இந்த ஓவரில் 16 ஓட்டங்கள் எடுக் கப்பட்டன. மறுபக்கம் நரைன் பந்தை ரிஷாப் சிக்சருக்கு விரட்ட, டில்லி அணி 6 ஓவரில் 67/3 ஓட்டங்களை எடுத்தது.

ஹர்ஷித் இம்முறை அபிஷேக்கை (18) அவுட்டாக்கினார். வருண் சக்கர வர்த்தி சுழலில் ரிஷாப் (27) ஆட்ட மிழந்தார். இதன் பின் ஓட்ட வேகம் குறைந்தது.

கொல்கத்தா அணிக்காக பந்தை சுழற்றிய வருண் சக்ரவர்த்தி, முதலில் ஸ்டப்சை (4) அவுட்டாக்கினார். சற்று தாக்குப் பிடித்த அக்சர் படேலை (15), நரைன் போல்டாக்கினார்.

மீண்டும் மிரட்டிய வருண், குமார் குஷாக்ராவை(1) அவுட்டாக்கி அசத்தினார்.

டில்லி அணி 111 ஓட்டங்களை எடுப் பதற்குள் 8 விக்கெட்டுகளை இழந்து திணறியது. கடைசிக் கட்டத்தில் குல்தீப் (34) கைகொடுக்க, டில்லி அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை எடுத்தது.

**சால்ட் அரைச்சதம்**

கொல்கத்தா அணிக்கு சுனில் நரைன் (15), பில் சால்ட் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. கலீல் அகமட் பந்தை சிக்சருக்கு அனுப் பிய சால்ட், 26ஆவது பந்தில் அரைச் சதம் கடந்தார். இவர் 68 ஓட்டங்களில் அக்சர் பந்தில் போல்டானார். ரிங்கு சிங் 11 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். அடுத்து இணைந்த வெங்கடேஷ் (26), அணித் தலைவர் ஸ்ரேயாஸ் (31) ஜோடி ஆட்டமிழக்காமல் இருந்து அணியை வெற்றிக்கு கொண்டு சென்றது.

கொல்கத்தா அணி 16.3 ஓவர் களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற் றது.

11 போட்டியில் 6இல் தோற்ற டில்லி அணியின் "பிளே ஆப்" வாய்ப்பு ஏறக்குறைய முடிவுக்கு வந்தது.

# இந்தியப் பெண்கள் வெற்றி

## முதல் ரி20 போட்டியில்

முதல் "ரி20" போட்டியில் அசத்திய இந்திய பெண்கள் அணி 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் சென்றுள்ள இந்திய பெண்கள் அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற் கிறது.

சில்ஹெட்டில் முதல் போட்டி நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஸ்மிருதி மந்தனா (9) ஏமாற் றினார். ஷபாலி வர்மா (31), யாஸ்திகா பாட்யா (36), அணித் தலைவர் ஹர்மன் பிரீத் கவுர் (30), ரிச்சா கோஷ் (23) நம்பிக்கை கொடுத்தனர். சஜீவன் சஞ்சனா (11), பூஜா (4) சோபிக்க வில்லை.



20 ஓவர்களில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட் டங் களை எடுத்தது.

**ரேணுகா அசத்தல்**

சவாலான இலக்கை விரட்டிய பங் களா தேஷ் அணிக்கு ரேணுகா சிங் தொல்லை கொடுத்தார். இவரது "வேகத்தில்" திலாரா (4), சோபனா (6) வெளியேறினர். முர்ஷிதா (13), பஹிமா (1), ஷோர்னா (11) சோபிக்க வில்லை. தொடர்ந்து மிரட்டிய ரேணுகா பந்தில் ரபேயா கான் (2) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் நிகர் சுல்தானா (51) அரைச்சதம் கடந்தார்.

20 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங் கள் மட்டும் எடுத்து தோல்வி யடைந் தது. இந்தியா சார்பில் ரேணுகா சிங் 3, பூஜா 2 விக்கெட் டுக்களைச் சாய்த்தனர்.

ஆட்டநாயகி விருதை ரேணுகா வென்றார்.

# பாகிஸ்தான் அணிக்கு புதிய பயிற்சியாளர்கள்

## கிர்ஸ்டன், கில்லஸ்பி நியமனம்



பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்சியாளர்களாக கேரி கிர்ஸ் டன், கில்லஸ்பி நியமிக்கப்பட் டுள்ளனர்.

இந்தியாவில் நடந்த உலக கிண் ணத் தொடரில் (50 ஓவர், 2023) பாகிஸ்தான் அணி சொதப்பியது. இதையடுத்து தலைமை பயிற்சி யாளர் கிராண்ட் பிராட்பர்ன், அணி இயக்குநர் மிக்கி ஆர்தர், அணித் தலைவர் பாபர் ஆசம் உள்ளிட்டோர் நீக்கப்பட்டனர். புதிய தலைவர்களாக ஷாகீன் ஷா அப்ரிடி ("ரி-20", ஒருநாள் போட்டி) நியமிக்கப்பட்டார்.



கடந்த மார்ச்சில் ஷாகீன் ஷா அப்ரிடி நீக்கப்பட்டு, மீண்டும் தலை வரானார் பாபர் ஆசம். டெஸ்ட் அணித் தலைவர் பதவியில் ஷான் மசூட் தொடர்கிறார்.

வரும் "ரி20" உலகக்கிண்ணத் தொடரை (ஜூன் 1-29) கருத்தில் கொண்டு பாகிஸ்தான் அணியின் "ரி20", ஒருநாள் போட்டிக்கான புதிய தலைமை பயிற்சியாளராக தென்னா பிரிக்காவின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் கேரி கிர்ஸ்டன் நியமிக்கப்பட் டுள்ளார்.

ஏற்கெனவே இந்திய அணி யின் பயிற்சியாளராக (2008-2011) இருந்த வர் கிர்ஸ்டன். இவரது பயிற்சி யில் இந்திய அணி உலகக்கிண்ணம் (2011, 50 ஓவர்) வென்றது. டெஸ்ட் அரங் கில் "நம்பர்-1" இடத்தையும் பெற்றது.

தற்போது ஐ.பி.எல்., தொடரில் குஜராத் அணியின் ஆலோசகர், துடுப்பாட்டப் பயிற்சியாளராக உள் ளார் கிர்ஸ்டன். வரும் மே 22இல் இங்கிலாந்து செல்லும் பாகிஸ்தான் அணி, நான்கு "ரி20" போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க உள் ளது. இத்தொடரில் இருந்து பாகிஸ் தான் அணியின் பயிற்சியாளர் பய ணத்தை கிர்ஸ்டன் தொடங்க உள்ளார்.

**அசார் முகமட் வாய்ப்பு**

பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் புதிய பயிற்சியாளராக அவுஸ்திரேலி யாவின் முன்னாள் "வேகப்புயல்" கில்லஸ்பி நியமிக்கப்பட்டுள்ளார். இங்கிலாந்தின் சசக்ஸ் கவுன்டி அணியின் பயிற்சியாளராக இருந்த அனுபவம் இவருக்கு உதவும். மூன்று வித கிரிக்கெட்டுக்கும் துணைப் பயிற்சியாளராக பாகிஸ் தான் அணியின் முன்னாள் "சகல துறை வீரர்" அசார் முகமட் செயற் படுவார். அனைவரும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய் யப்பட்டுள்ளனர்.

## ஜனாதிபதி...

ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப் பினர்கள் சிலர் ஜனாதிபதி ரணிலுடன் சேர்ந்து கொண்டமைக்காக அவர்களைக் கட்சிப் பொறுப்புக்களில் இருந்து நீக் கியிருந்தார் மைத்திரி. அதையடுத்து மைத்திரிக்கு எதிராகத் தொடுக்கப் பட்ட வழக்கில், சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை அவர் வகிக்க நீதி மன்றம் இடைக்காலத் தடை உத்தர வைப் பிறப்பித்துள்ளது.

அப்படி இருந்தும்கூட, தனது சொந் தத் தேவைக்காக ஜனாதிபதியைச் சில நாட்களுக்கு முன் மைத்திரி சந்தித் துள்ளார்.

மைத்திரியின் இந்த இரட்டை வேட த்தை அவரால் கட்சிப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட அந்த எம்.பிக் களே அம் பலப்படுத்தியுள்ளார்கள் என்று அந் தச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (ம-7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழியர் சேமலாப நிதிக்கான வட்டி விகிதம் 13 சதவீதமாக அதிகரிப்பு- நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்கப்பட்டிருந்த 9 சதவீத வட்டி விகிதத்தை 13 சதவீதமாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, முன்னதாக ஊழியர் சேமலாப நிதிக்கு 9 சதவீத வட்டி விகிதமே வழங்கப்பட்டிருந்தது எனவும், எமது நாட்டில் ஊழியர் சேமலாப நிதியின் வைப்புத் தொகை மிகவும் அதிகமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதில் 27 இலட்சம் உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். 2023 ஆம் ஆண்டு ஊழியர் சேமலாம நிதியின் வருங்கால வைப்பு நிதியை முதலீடு செய்து, அதில் ஈட்டிய பணத்தில் 9 சதவீதத்திற்கு பதிலாக 13 சதவீதத்தை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது.

இந்த வட்டி விகிதம் குறைந்தபட்ச விகிதமாக 9 வீதமே காணப்பட்டிருந்தது.

ஆனால் இன்று இதனை 13 சதவீதத்தை அதிகரித்திருப்பது அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

அந்த நிதியின் முதலீடு உறுப்பினர்களுக்கே வழங்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (நி-6)


லங்கா மஹறால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

Western Union MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974 (549)


## விசேட அறிவித்தல்


யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்கள் சங்கம் எதிர்வரும் 01.05.2024 அன்றைய தினம் மே தினம் என்பதால் சகல அங்கத்துவ தொழில் நிலையங்களையும் மூடி ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(602)

தலைவர்- இரத்தினராசா

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்

தாய் மடியில் 01 – 01 – 1956



இறைவன் அடியில் 01 – 04 – 2024

கடந்த 01.04.2024 (திங்கட்கிழமை) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்


**அமரர். சின்னத்தம்பி அருச்சுனன்**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 29.04.2024 நேற்று (திங்கட்கிழமை) கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் 01.05.2024 நாளை (புதன்கிழமை) மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம். எங்கள் அன்புத் தெய்வம் இவ்வுலகை விட்டு பிரிந்த செய்தி கேட்டு எமக்கு பல வழிகளில் உறுதுணையாக இருந்தவர்களுக்கும் இதுவரை பல உதவிகளை வழங்கி வருபவர்களுக்கும், தொலைபேசி மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமும் ஆறுதல் கூறியோருக்கும், நேரில் வருகை தந்தவர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் இருகரம் கூப்பி எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகள் தெரிவித்துக்கொள்கின்றோம்.
உற்றார்,உறவினர் , நண்பர்கள் தனித்தனியே நன்றிகளோ அழைப்போ தெரிவிக்க முடியாமையினால் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (0034)

DR.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

தகவல் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி.வி.சிவானந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்.

அமரர்.
**முருகர் பூபாலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (த-0232)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

## இராசிபலன்

30.04.2024
சித்திரை 17, செவ்வாய்க்கிழமை
சப்தமி பின்னிரவு 3.10 மணிவரை

உத்தராடம் பின்னிரவு 1.44 மணிவரை
சுபநேரம் 10.28- 11.58 மணிவரை
இராகுகாலம் 2.58-4.28 மணிவரை

சந்திராஷ்டமம் -ரோகிணி

வளவன்

**மேஷம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இயல்பான வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**சிம்மம்** இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், போட்டிக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, நண்பர்கள் சகாயமுண்டு.

**மகரம்** தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**கும்பம்** சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் தவறிய உண்மை பொய்யைப் போல தீயது.

# "பல வருட கனவு வெறும் கனவாக போய்விடுமா?"

## வடமாகாண வேலையில்லா பட்டதாரிகள் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**அனைத்து பட்டதாரிகளுக்கும் பாரபட்சமின்றி வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி யாழில் போராட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**




வடக்கு மாகாண வேலை யில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்னாள் குறித்த போராட்டம் இடம்பெற்றது .

இதன் போது ஏமாற்றாதே, ஏமாற்றாதே பட்டதாரிகளை ஏமாற்றாதே, வேண்டும் வேண்டும் வேலை வேண்டும், நாசம் நாசம் கனவுகள் நாசம் உள்ளிட்ட பல்வேறு கோசங்களை எழுப்பியிருந்ததுடன் பல வருட கனவு வெறும் கனவாகவே போய் விடுமா? எமக்கான வாழ்க்கையை நாம் எப்போது வாழ்வது, அழிக்காதே அழிக்காதே எமது எதிர்காலத்தை அழிக்காதே, வயது ஏறுது வாழ்க்கை போகுது, வேலை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கிய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக வேலையில்லாமல் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பாதிப்புக்களை சுட்டிக்காட்டி தமக்கான வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென வலியுறுத்தி வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன் றையும் அனுப்பி வைத்துள்ளதுடன் குறித்த கோரிக்கைகளை வலியுறுத்தி அரசியல்வாதிகளுக்கும் அந்த மகஜரின் பிரதிகளை அனுப்பிவைக்க உள்ளதாகவும் பட்டதாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6-33)


விற்பனைக்கு




KORD, KORA
அச்சு இயந்திரங்கள்
விற்பனைக்கு
தொடர்புகளுக்கு
076 097 3121


## நெடுந்தீவில் நடமாடும் சேவை



(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு இணங்க நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான நடமாடும் சேவையானது கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

விண்ணப்பதாரிகளுக்கான மருத்துவ சான்றிதழ் மற்றும் எழுத்துப் பரீட்சை என்பன குறித்த தினத்தில் இடம்பெற்றதுடன் குறித்த சேவையில் 228 பயனாளிகள் பயன் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

## சந்நிதியிலிருந்து கதிர்காம பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

சைவசமய சிவனடி திருநீற்றுச் சித்தர் நா.க.சி.கணபதி கதிரவேல் (ஜே.பி) தலைமையிலான முருகபக்தர்கள், சிவனடியார்கள் குழு சரவணை ஸ்ரீ செல்லக் கதிர்காமம் பொன்னித் திருத்தலத்திலிருந்து செல்வச் சந்நிதிக்கு கிரிவலம் வந்து அங்கு இருந்து கதிர்காமத்தை நோக்கி எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி பாதயாத்திரை இடம் பெறவுள்ளது. (நி-6)

## மேதினமும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

"அதிபர், ஆசிரியர்களாக எமது உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைவோம்" எனும் தொனிப் பொருளில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினமும் பொதுக் கூட்டமும் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் நடைபெறவுள்ளது. (நி-6-33)

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of Public Bathroom near the OPD Pharmacy, Renovation works of Public Bathroom near the workshop, valley Gutter fixing infront of ward 24, Waste Management plant Entrance Gate . | 1500.00 | 56,000.00 | 91 | 2.80 | C8 |
| 2. | Canopy Roof work at Kitchen Building & Toilet Renovation at CCU Unit, Ceiling & Roof work at Ward 18. | 1500.00 | 62,000.00 | 91 | 3.12 | C8 |
| 3. | Carpet Road for Medical Complex porch to Gate No 09. | 1500.00 | 87,000.00 | 91 | 4.36 | C8 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

3. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

4. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 02.05.2024 up to 15.05.2024 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

5. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 16.05.2024, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**
30.04.2024

(c-0233)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**
**வாழ்நாள் பேராசிரியர்,**
**முன்னாள் துணைவேந்தர்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

இதே போல் வெவ்வேறு பீடங்களிலும் பேராசிரியர்களால் சர்வதேச ரீதியில் பல ஆய்வுகள் முன்னெடுக்கப் படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் தேசிய ரீதியிலும் பிரதேச ரீதியிலும் பல்கலைக்கழக உதவியுடனும் தேசிய ஆராய்ச்சி மைய உதவியுடனும் பல ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகம் ஆய்வுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் படிப்படியாக ஆய்வுகள் அதிகரித்து வருவது வரவேற்கத்தக்கது. இன்றைய விரிவுரையாளர்களின் பதவி உயர்வு அவர்களின் ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளில் தங்கியிருப்பதால் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு கூடிய கரிசனை கொண்டவர்களாக காணப்படுகின்றனர். மேலும் இப்பல்கலைக்கழகம் எமது சமூகப் பிரச்சினைகள் பற்றி ஆய்வுகளை முன்னெடுப்பதில் கூடிய ஈடுபாடு காட்டி வருகின்றது. நெருங்கிய ஊடாட்டத்தைப் பேணி வருகின்றது.


### உடற்கல்வி அலகு

இவ்வலகு பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் உடல் நல மேம்பாடு, விளையாட்டு திறன் விருத்தி, பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு சமூகத்தினருடன் ஆரோக்கியமான நல்லுறவைப் பேணுவது ஆகிய இலக்குகளைச் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழகத்தின் ஆரம்ப காலத்தில் விளையாட்டு மைதானம், கூடைப்பந்து ஆடுகளம் பரமேஸ்வரா வளவில் அமைந்திருந்தன. 1990 களின் ஆரம்பத்தில் தற்போதைய மைதானத்தின் ஒரு பகுதிக்கு விளையாட்டு மைதானம் இடமாற்றம் செய்யப்பட்டது. இந் நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்படட 30இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போதைய மைதானத்தின் தெற்குப் பகுதியில் தற்காலிக வீடுகள் அமைத்து வீட்டுத் தோட்டங்களுடன் வாழ்ந்தன. இக் குடியிருப்பை பொன்னம்மான் கிராமம் என அழைக்கப்பட்டது. இங்கு வாழ்ந்த குடும்பங்கள் 1995 ஐப்பசி 30 ஆம் திகதி நிகழ்ந்த இடப்பெயர்வில் வேற்றிடம் சென்றனர்.

யாழ்ப்பாணப் பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பொழுது வலிகாமத்தில் இராணுவத்தால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு அணை விளையாட்டு மைதானத்தை ஊடறுத்துச் சென்றதுடன் மைதானத்தை இரண்டாகப் பிரிந்தது. மக்கள் 1996 ஏப்ரல் மீளக் குடியேறிய போது அணையின் கிழக்குப் பகுதி இராணுவத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளும் (cleared area), மேற்குப்பகுதி இராணுவத்தின் அரைக்கட்டுப்பாட்டிற்குள்ளும் (Semi cleared area) இருந்தன. மேலும் பொன்னம்மான் கிராம மக்கள் மீளக் குடியேற முற்பட்டனர். மைதானம் பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் மைதானத்தை குறிப்பாக பொன்னம்மான் கிராம பகுதியை துப்புரவாக்குவதில் வேலை மேற்பார்வையாளர் திரு.சுந்தரராஜா அவர்களும் இவரின் கீழிருந்த தொழிலாளர்களும் பெரும் பணியாற்றினார்கள். திரு.சுந்தரராஜாவின் சேவை மிகவும் பாராட்டுக்குரியது. அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை, உடுவில் உதவி அரசாங்க அதிபரின் உதவியுடன் இடம் பெயர்ந்திருந்த பொன்னம்மான் கிராம மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார். மேலும் இவரது கடும் முயற்சியால் இராணுவத்தினரின் உதவியுடன் இரு தடவைகள் மைதானம் மட்டப்படுத்தப் பட்டு. மிகப்பெரிதாக விரிவாக்கப்பட்டு பாவனைக்குரியதாக சீர் செய்யப்பட்டது. இம் முயற்சிக்கு அன்றைய யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக இருந்த இன்றைய Field Marshal சரத் பொன்சேக்கா பெரிதும் உதவியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் ரான் RRAN நிறுவனம் இலவசமாகக் கொடுத்த Sweeping cement பக்கட்டுகள் மைதானத்தை சுற்றி மதில் கட்ட பெரிதும் உதவின. இந் நிறுவனத்தின் இயக்குநர்சபையில் துணைவேந்தர் அங்கத்தவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டு செயற்பாடுகளால் பல்கலைக்கழகத்திற்கு அறிக்கையான, பாதுகாப்பான, மிக விசாலமான விளையாட்டு மைதானம் கிடைக்கப்பெற்றுள்ளது.




இன்று விளையாட்டு மைதானம் மிகப்பெரிய உள்ளக விளையாட்டு அரங்கையும், சிறிய விளையாட்டு அரங்கொன்றையும், பார்வையாளர் அரங்கையும் கொண்டு நவீன விளையாட்டு மைதானமாகக் காட்சி தருகின்றது.

உள்ளக அரங்கில், 7 பூப்பந்தாட்ட அரங்குகளும் கூடைபந்தாட்ட அரங்குகள், கரப்பந்தாட்ட அரங்குகள் மற்றும் பல்வேறு வசதிகளை கொண்டு விளங்குகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் 23இற்கு மேற்பட்ட விளையாட்டுகளில் ஈடுபட்டு இருப்பதுடன் 30இற்கு மேற்பட்ட மாணவ அணிகளைக் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டு இருந்தாலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் உதைபந்தாட்டத்தில் சிறப்பாக விளங்கி வருகின்றதுடன் தேசிய ரீதியிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பல்கலைக் கழகத்திற்குள்ளேயும், பல்கலைக்கழகங்களுக்கிடையேயும், விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

யுத்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மாணவர்களை தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு விமானத்தில் அனுப்பி போட்டிகளில் பங்குபற்ற வைத்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண வளாக ஆரம்ப காலத்தில் திரு.எஸ்.பத்மநாதனும், செல்வி புனிதவதி சிவஞானம் ஆகிய இருவர் இவ்வலகு வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றினர். 1990களில் உடற்கல்விப் பணிப்பாளராக இருந்த திரு.தியாகராசாவினதும் இன்றைய உடற்கல்விப் பணிப்பாளரான திரு.கே.கணேசானந்தனதும் பணிகள் இவ்வலகின் வளர்ச்சிக்குப் பெரும்பங்களித்துள்ளன.

பல்கலைக் கழகத்தில் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு ஒரு ஆலோசனைக் குழு ஒன்றும் இருக்கிறது. இதன் பணியும் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு மாணவர்களுக்கு பெரும் உறுதுணையாக இருக்கின்றது. இவ்வலகின் வளர்ச்சியிலும் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு போதனாசிரியர்களாக திருமதி ஜெயனந்தகுமாரி சரவணபவ ஐயர், செல்வி இராதை அருளம்பலம், திருமதி சிவகௌரி, திரு டானியல் மதியழகன், திரு.எம்.இளம்பிறையன், செல்வி சுரேந்தினி,திரு.எஸ் ரஞ்சித்குமார், திரு.எஸ்.திருமாறன் ஆகியோரின் பணிகள் மிகவும் பாராட்டிற்குரியவை. மேலும் பல பகுதிநேர போதனாசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் பலர் இவ்வலகின் வளர்ச்சிக்கும், சிறப்பான இயக்கத்திற்கும் பெரும்பணி ஆற்றிவருகின்றனர் என்பது பாராட்டிற்குரியது.

### மாணவ மையம்

பல்கலைக்கழகத்தில் இரண்டு தட்டுகள் கொண்ட நவீன மிகவும் விசாலமான மாணவ மையம் 1999இல் துணைவேந்தர் பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்கு விடப்பட்டது. இம்மாணவ மையத்தில் மாணவர்களுக்கான பல்வேறு சேவைகளை ஒரேயிடத்தில் வழங்கும் பணிமனைகள், சிற்றுண்டிச்சாலை, பூப்பந்தாட்ட ஆடுகளம், மேசைப்பந்தாட்ட ஆடுகளம், உளநல சேவைப்பகுதி, மாணவர் நலச்சேவைப் பகுதி, வங்கி, உபதபாற்கந்தோர், பல்கலை மாணவ சங்கப்பணிமனை, பழைய மாணவர் சங்கப்பணிமனை, பழைய மாணவர் நலச்சேவைப் பணிமனை, இறை வணக்க மண்டபம், பெரிய பொது நிகழ்ச்சி மண்டபம், தொழில் வழிகாட்டுப் பணிமனை, புத்தக விற்பனை நிலையம், மாணவர் ஒழுக்காற்றுப் பணிமனை, பணியாளர் மேம்பாட்டு மையம் எனப் பல சேவை வழங்கும் பணிமனைகளைக் கொண்டுள்ளது. மேலும் இன்று இத் தொகுதியில் மதிய இலவச உணவு வழங்கும் பகுதியும் இயங்குகின்றது.

மாணவ நலச் சேவை வசதிகளை நீண்ட காலமாக மேற்கொண்டு வந்த சிரேஷ்ட பதிவாளர் ஜெயக்குமார் பல்கலைக் கழக சமூகத்தால் பாராட்டப்பட்டவர். இன்று அவர்எம்மிடம் இல்லை. இப் பொன்விழா இறுதிக் காலத்தில் அவரை ஞாபகப்படுத்துவது அவருக்கு அளிக்கும் கௌரவம் ஆகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தான் 1993 இல் முதன்முதலாக தொழில் வழிகாட்டும் பணிமனை உருவாக்கப்பட்டது. பேராசிரியர் நந்தகுமார் முதலாவது வழிகாட்டி இணைப்பாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு பல ஆண்டுகளுக்குப் பின்னரே நாட்டின் ஏனைய பல்கலைக் கழகங்களில் தொழில் வழிகாட்டும் பணிமனைகள் ஏற்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது இவ் அலகில் திரு. கௌத்தமன் தொழில் நிரந்தரமான வழிகாட்டியாக செயற்படுகின்றார்.

### சிரேஷ்ட பொது அறை (Senior common Room)

பல்கலைக்கழகங்களில்சிரேஷ்ட பொது அறை இருப்பது வழக்கம். யாழ்ப்பாண வளாகத்தின் ஆரம்ப காலத்திலிருந்து சிரேஷ்ட பொது அறையின் விழுமியங்களும், செயற்பாடுகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ் அறை விரிவுரையாளர்கள், நிர்வாகிகள் ஓய்வு வெடுக்கவும், சிற்றுண்டி, பானம் உட்கொள்ளவும், புதுவலவாக்கம் பெறவும், சக விரிவுரையாளர்களுடன் புலமை சார் விடயங்கள் பற்றி கலந்துரையாடவும் நாட்டு நடப்புக்கள் பற்றி கலந்துரையாடவும் வசதியளிக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தரும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கல்வியலாளர்கள், பிரமுகர்கள் சிரேஷ்ட பொது அறைக்கு வரத் தவறுவதில்லை. மேலும் இவர்கள் வருகை அறிவுப் பகிர்வில் முக்கிய இடத்தை வகிக்கின்றதுடன், எமது பல்கலைக் கழகத்தின் சிறப்புக்கள் வெளியில் கொண்டு செல்லப்டுகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு பழைய மாணவர்கள் பல்கலைக்கு மீண்டும் வருவதும், தங்களுக்கு கற்பித்த விரிவுரையாளர்களை சந்திக்கும் இடமாகவும் சிரேஷ் பொது அறைவிளங்குகின்றது.

இப் பல்கலைக் கழகத்தில் அரும் பணியாற்றி மறைந்த துணை வேந்தர்கள், பீடாதிபதிகள், நூலகர்கள், பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் திருவுருவப்படங்கள் சிரேஷ்ட பொது வறையில் இருப்பது அவர்கள் ஞாபகம் பேணப்படுகின்றது.

இச் சிரேஷ்ட பொது அறையின் தலைவராகப் பலர் தன்னலமற்ற சேவையை வழங்கியுள்ளனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கென்யாவில் கனமழை 40 பேர் உயிரிழப்பு

(நைரோபி)

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் கடந்த சில நாட்க ளாக கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக தலை நகர் நைரோபி வெள்ளத்தில் மிதக்கிறது. முக்கிய சாலைகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் இயல்பு நிலை முற்றிலும் பாதிக்கப்பட் டுள்ளதுடன் ஒன்றரை லட்சம் மக்கள் வீடுகளை இழந்து நிற் கதியாகியுள்ளனர்.

இதனிடையே, கென்யாவில் உள்ளமிகப்பழமையான அணை யான கிஜாப் அணை வெள்ளத் தில் சேதம் அடைந்தது. தடுப் புச்சுவர் உடைந்ததில் வெள் ளம் பெருக்கெடுத்து ஓடி அருகில் உள்ள கிராமங்களுக்குள் நீர் புகுந்தது. இதனால், வீடுகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப் பட்டன.

வெள்ளத்தில் சிக்கி இது வரை 40 பேர் வரை உயிரி ழந்ததுடன் பலர் இன்னும் மாயமாகியுள்ளதால் உயிரி ழப்பு எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

கென்யாவில் கடந்த மார்ச் மாதம்முதலே கனமழை பெய்து வருகிறது. இதனால், பாடசா லைகளுக்கு விடுமுறை விடப் பட்டுள்ளன. இதனிடையே, எதிர்பாராத மழையை எதிர் கொள்ள முடியாமல், கென்யா அரசு உலகநாடுகளிடம் உதவி கோரியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (நி-6)

## பிலிப்பைன்ஸில் கடும் வெப்பம் பாடசாலைகளுக்கு விடுமுறை

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் கடும் வெப்பம் நிலவி வருவதால் 2 நாட்கள் அனைத்து அரசாங்க பாடசாலைகளுக்கும்விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் கற்றலுக் கான மாற்று ஏற்பாடாக இணைய வழி கல்வியை மேற்கொள்ள அந்நாட்டு கல்வி அமைச்சு நட வடிக்கை எடுத்துள்ளது. இந்நிலை யில், பிலிப்பைன்ஸின் தலை நகர் பகுதியில் அடுத்த மூன்று நாட்களில் வெப்பநிலை 37 டிகிரி செல்சியஸை எட்டக் கூடும்என கணிக்கப்பட்டுள்ளது.

மனித உடலில் உணரப் படும் வெப்பநிலையான வெப் பக் குறியீடு 45 டிகிரி செல்சியஸ் என்ற அபாயகரமான மட்டத் திற்கு உயரும் என எதிர்பார்க் கப்படுகிறது. (நி-6)

## இஸ்ரேலிய பிரதமருக்கு எதிராக

## அச்சத்தில் இஸ்ரேலிய அதிகாரிகள் - நி

(வோஷிங்டன்)

**இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்ய முக்கிய அதிகாரிகளிற்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் பிடியாணையை பிறப்பிக்க த இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள்க யோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.**

ஹமாஸினான மோதல் தொடர்பில் சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் பிரதமர் உட்பட முக்கிய அதிகாரிக ளுக்கு எதிராக பிடியா ணையை பிறப்பிக்கலாம் என ஐந்து இஸ்ரேலிய மற் றும் வெளிநாட்டு அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹமாஸின் தலைவர்க ளுக்கு எதிராகவும் பிடியா ணைகளை பிறப்பிப்பது குறித்தும் சர்வதேச நீதிமன் றம் ஆராய்வதாக அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றம் தனது நடவ டிக்கையை தொடர தீர்மா னித்தால் காசா பள்ளத் தாக்கிற்கு மனிதாபிமான உதவிகள் செல்வதை தடுத் தமை ஹமாஸின் ஒக்டோபர் ஏழாம் திகதி தாக்குதலிற்கு மிகக்கடுமையான பதில் தாக்குதலை முன்னெடுத் தமை போன்ற குற்றச்சாட் டுகளை நீதிமன்றம் இஸ் ரேலிய அதிகாரிகளிற்கு எதிராக சுமத்தலாம் என ஐந்து அதி காரிகளும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து கவலை கொண்டுள்ள இஸ்ரேலிய அதி காரிகள் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிற்கு எதிராகவும் பிடியாணை பிறப்பிக் கப்படலாம் என தெரிவித்துள்ள னர்.

எனினும் ஹமாஸ் அமைப் பைசேர்ந்த யாருக்கு எதிராக

## மோடிக்கு ஆதரவு தெரிவித்து பிரித்தானியாவில் பேரணி



(லண்டன்)

பிரித்தானிய தலைநகர் லண் டனில் உள்ள இந்திய வம்சாவ ளியினர் சிலர் பிரதமர் மோடிக்கு ஆதரவளித்து பேரணி நடத்தியுள்ளனர்.

இந்தியாவில் லோக்சபா தேர் தல் நடந்துவரும் நிலையில், பிரித்தானிய தலைநகர் லண்ட னில் உள்ள பா.ஜ ஆதரவாள ர்களான இந்திய வம் சாவளியினர் பா.ஜ கொடியுடன் பேரணி யாக சென்றுள்ளனர்.

'ரன் பார் மோடி' என்ற பெயரில் இந் திய வம்சா வளியி னரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் பேர ணியில், சுமார் 500 பேர் பங்கேற்றிருந் தனர்.

பேரணியில் ஈடுபட் டவர்கள், இந்திய தேசிய கொடி மற்றும் பா.ஜ கொடிகளை ஏந்தியபடி பிரதமர் மோடிக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியவாறு இவ் வாறு பேரணியில் ஈடுபட்ட னர்.

குறித்த பேரணியானது, லண்டனிலுள்ள புகழ்பெற்ற டவர் பிரிட்ஜ் அருகே முடி வுக்கு வந்தது.

இதேவேளை, இந்திய பிரதமர் மோடிக்கு இந்தியா மட்டுமல்லாமல் உலக நாடு களிலும் ஆதரவாளர்கள் உள்ளனர்.

அதன்படி, வெளிநாடுக ளில் வசிக்கும் இந்திய வம் சாவளியினரில் பெரும்பா லானோர் மோடிக்கு தொடர் ந்து ஆதரவளித்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## அமெரிக்காவி உருக்குலைந்த

+ கைக்குழந்தை
+ சுமார் 100
+ சுமார் 20,0

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஒக்ல ஹோமாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீசிய சூறா வளியால் ஒரு கைக்குழந்தை உட்பட நான்கு பேர் உயிரிழந் துள்ளனர்.



## டிப்பர் - கார் மோதி விபத்து 10 பேர் பலி - 23 பேர் படுகாயம்

(டில்லி)

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் காரொன்றுடன் டிப்பர் ரக வாகனமொன்று மோதி விபத்துக்குள்ளா னதில் 3 சிறுவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ள னர்.

மேலும் இந்த விபத்தில் 23 பேர் வரை படுகாய மடைந்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

சத்தீஸ்கர் மாநிலம் பிமி தரா மாவட்டத்தில் அதி வேக வீதியில் பயணித்த, பொருட்களை ஏற்றிச்சென்ற டிப்பர் ரக வாகனமொன்று வேகக் கட்டுப்பாடின்றி, வீதி யோரம் நின்று கொண்டி ருந்த வாகனத்தின் மீது மோதியுள்ளது.

இந்த கோரவிபத்தில் 5 பெண்கள், மூன்று சிறுவர் கள் என 10 பேர் உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

சம்பவ இடத்திற்கு விரை ந்த பொலிஸார், படுகாய மடைந்தவர்களை மீட்டு, அனுமதித்துள்ளதுடன். விப த்து தொடர்பான மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...க சர்வதேச நீதிமன்றம் பிடியாணை

## - நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியீடு



**...ன்யாகு உட்பட ...தசகுற்றவியல் ...தயாராவதாக ...ள்காட்டி நியூ ...து.**

குற்றச்சாட்டுகள் சுமத்தப்படலாம் என்ற விபரங்கள் வெளியாக வில்லை.


சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணைகளை உலகம் இஸ்ரேலிற்கான ஒரு தார்மீக கண்டனமாக பார்க்கக் கூடும். காசாவில் அதன் நடவடிக்கைகளிற்காக கடந்த சில மாதங்களாக இஸ்ரேல் சர்வதேச அளவில் கடும் கண்டனத்தை எதிர்கொண்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி இஸ்ரேலின்நடவடிக்கைகள் மிகவும் அளவுக்கதிகமானவை என தெரிவித்துள்ளார்.

ஹமாசிற்கு எதிராக இஸ்ரேல் இராணுவ நடவடிக்கையை தொடர்ந்தும் முன்னெடுக்கின்ற நிலையில் பிடியாணை இஸ்ரேலின் கொள்கைகள் மீது தாக்கத்தை செலுத்தலாம்.

நீதிமன்றம் பிடியாணையை பிறப்பிக்கலாம் என்பதை இஸ்ரேலிய அரசாங்கத்தின் திட்டமிடல் பிரிவிற்கு தெரிவித்துள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# உலகின் மிகப் பெரிய விமான நிலையம் டுபாயில்



(டுபாய்)

உலகிலேயே மிகப்பெரிய விமான நிலையம் டுபாயில் அமைக்கப்படவுள்ளதாக அந்த நாட்டின் ஆட்சியாளர் ஷேக் முகமது தெரிவித்துள்ளார்.

டுபாயில் தற்போது உள்ள சர்வதேச விமான நிலையத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கைக்கான புதிய திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

"தற்போது டுபாயில் உள்ள விமான நிலையத்தை விட புதிதாக உலகின் மிகப் பெரிய விமான நிலையம் அமைக்கப்பட உள்ளது.

35 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் இந்த விமான நிலையம் கட்டப்பட உள்ளது. புதிய விமான நிலையம் தற்போது உள்ள சர்வதேச விமான நிலையத்தை விட 5 மடங்கு பெரியதாக இருக்கும்.

இந்த விமான நிலையத்தில் 400 வாயில்கள் மற்றும் 5 ஓடுபாதைகளும் அமைய உள்ளது. சுமார் 260 மில்லியன் பயணிகளை உள்ளடக்கும் வகையில் உலகின் மிகப்பெரிய திறன் கொண்ட விமான நிலையமாக இது இருக்கும்.

டுபாய் விமான போக்குவரத்து துறை, முதன்முறையாக இந்த விமான நிலையத்தில் புதிய விமான தொழில்நுட்பங்களை காண உள்ளது.

மேலும், விமான நிலையத்தை சுற்றி ஒரு முழு நகரம் கட்டப்படும். இந்த புதிய விமான நிலையம் அல் மக்தூம் சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கப்படும் என தெரிவித்துள்ளார். (நி-6)

# ...வின் ஒக்லஹோமவை தாக்கிய சூறாவளி

## ...ந்த சல்ஃபூர் நகரம்-அவசரநிலை பிரகடனம்

**...தை உட்பட 4 பேர் உயிரிழப்பு**
**...0 பேர் காயம்**
**...,000 வீடுகளில் மின் துண்டிப்பு**

மேலும், கடுமையான வானிலை காரணமாக ஒரு கிராமப்புற நகரத்தின் மையப்பகுதியில் கட்டடங்கள் தரைமட்டமாகியுள்ளன.

ஒக்லஹோமா மாநிலம் முழுவதும் குறைந்தது 100 பேர் காயமடைந்தனர்.

20,000இற்கும் மேற்பட்ட வீடுகளில் மின்னிணைப்புகளும் துண்டிக்கப்பட்டதால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

சுமார் 5,000 மக்கள் வசிக்கும் சல்ஃபூரில் நகரே உருகுலைந்துள்ளது.அங்கு ஏராளமான வீடுகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

கார்கள் மற்றும் பேருந்துகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஒக்லஹோமாவில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)






# ஐஸ்லாந்தில் எரிமலை சீற்றம்

## அவசர காலநிலை பிரகடனம்



(ஐஸ்லாந்து)

ஐஸ்லாந்தின் தென் பகுதியிலுள்ள ரெக்ஜேன்ஸ் வளைகுடாவில் காணப்படும் எரிமலை வெடித்துச் சிதறியுள்ளமை காரணமாக அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எரிமலையிலிருந்து வெளியேறும் தீப்பிழம்புகளால் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதனை அண்மித்து வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு ஏற்கனவே அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

ஐஸ்லாந்தின் மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றான ப்ளூலகூன் அபாயகரமான பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பரிகாரயாகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு, ஒட்டன்குள விநாயகபுர பாணலிங்கேஸ்வர நர்மதா நதீஸ்வரர் சிவன் கோயில் குருபெயர்ச்சி பரிகாரயாகம் நாளை புதன்கிழமை காலை 5 மணிக்கு நடேசர் அபிசேகத்தை தொடர்ந்து காலை 9 மணிக்கு குருப்பெயர்ச்சி பரிகாரயாகம் இடம்பெறவுள்ளது என ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (நி-6)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரை 21,055 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி அதிக டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன் கம்பஹா மாவட்டத்தில் 1,936 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையுடன் டெங்கு நோயாளர்கள் அதிகரிக்கக் கூடும் என அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி-6)

# குறைவடைந்து வரும்
## தொழிலாளர்களின் எண்ணிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடத்தில் தொழிலாளர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், 2022 ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியாக 8.54 மில்லியனாக இருந்த தொழிலாளர் எண்ணிக்கை கடந்த ஆண்டு 8.40 மில்லியனாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வேலையற்ற மக்கள் தொகை மற்றும் தொழிலாளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட சரிவு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவு காரணமாக, வேலையின்மை விகிதம் முந்தைய ஆண்டைவிட 2023ஆம்ஆண்டில் 4.7 சதவீதமாக மாறாமல் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 | 100-130 | 100 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 100 | 70-80 | 120 |
| தக்காளி | 100 | 100 | 120 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100-130 | 140 |
| கோவா | 150 | 180 | 200 | 150 | 200 |
| கரட் | 300 | 300 | 250 | 250 | 300 |
| பூசணி | 80 | 140 | 80 | 80-100 | 100 |
| புடோல் | 80 | 200 | 100 | 100 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 50 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 320 | 300 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 300 | 250 | 300 |
| பாகற்காய் | 350 | 350 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 150 | 60 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 100 | -- | 150 |
| பயற்றங்காய் | 200 | 160 | 200 | 200 | 100 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 220 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 280 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 300 | 200 | 150 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 700 | 500 | 400-700 | 600 |
| போஞ்சி | 250 | 300 | 300 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 50 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 60-80 | 120 |
| தேசிக்காய் | 700 | 700 | 800 | 500-800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 100 | 110 | 80-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 450 | 550 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 60 | 90 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 120 | 80 | -- |

# இன்று ஒரு தகவல் 109



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## விருந்தினருக்கு வேண்டிய குறிப்புகள்

ஒருவர் அவசர அவசரமாக வீட்டை பூட்டி விட்டு வெளியே கிளம்பிக் கொண்டு இருந்தார். என்ன விடயம் என்று விசாரித்தார் இன்னொருத்தர். சொந்தக்காரர் ஒருவர் ஊரில் இருந்து வருவதாக கடிதம் போட்டு இருக்கிறார். அது தான் என்று சொன்னார் இவர். ரயில்வே ஸ்ரேசனுக்கு போய் அழைத்து கொண்டு வரப்போறீர்களா என்று கேட்டார் அவர். அது எல்லாம் ஒன்றும் இல்லை சேர். அந்த ஆள் வருவதற்குள் எங்கேயாவது தலைமறைவாக போய் விடலாம் என்று கிளம்பிக்கொண்டு இருக்கிறேன் என்றார் இவர். விருந்தினர்கள் வருகிறார்கள் என்றால் வீட்டில் இருப்பவர்கள் வெளியில் புறப்படலாம் என்று யோசிக்கிற காலம் இது. சொந்தக்காரர் மேல் இருக்கிற வெறுப்பு தான் இதற்கு காரணம் என்று சொல்லி விட முடியாது.

பரபரப்பான வாழ்க்கை, விலைவாசி உயர்வு வீட்டிலே இடவசதி பற்றாக்குறை இவை எல்லாம் தான் இதற்கு காரணம். அதனாலே இப்போ ஒரு வீட்டிற்கு விருந்தினராக போக வேண்டும் என்கின்ற அபிப்பிராயம் உங்களுக்கு இருந்தால்... நீங்கள் நுணுக்கமாக தெரிந்து வைத்து கொள்ள வேண்டிய சில குறிப்புகள் இருக்கிறது. பல பேருடைய அனுபவங்களில் இருந்து சேகரம் செய்தவை. ரொம்ப உபயோகமாக இருக்கும். கேட்டு வைத்து கொள்கிறீர்களா. அதாவது ஒரு நல்ல விருந்தினராக நடந்து கொள்வது எப்படி. விருந்தினரை உபசரிப்பது எப்படி.என்பதை பற்றியே நிறைய பேர் சொல்லி இருக்கிறார்கள் திருவள்ளுவர் சொல்லி இருக்கிறார். அதனாலே அது பற்றி நமக்கு வேண்டாம்.

உபசரிப்பு நன்றாக இருக்க வேண்டும் என்றால் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும். அது தான் நமக்கு இப்போது தேவை. நீங்கள் யார் வீட்டிற்கு போனாலும் போவதற்கு முன்பு ஒரு லெட்டர் போடுங்கள் சேர். எத்தனை பேர் போகிறீர்கள். எவ்வளவு நாள் தங்கப் போகிறீர்கள் எல்லாவற்றையும் எழுதி விடுங்கள் நீங்கள் தங்கப் போகின்ற உறவினர் வீட்டிற்கு உங்களுக்கு வேண்டப்பட்ட நண்பர்களையும் கூட்டி கொண்டு போகாதீர்கள். நீங்களே ஓசி அதில இவர்கள் வேறயா? இது மாதிரி உங்கள் வீட்டிற்கு வந்து இத்தனை நாள் தங்கலாம் என்று இருக்கே. வரலாமா என்று எழுதிக் கேளுங்கள். பெரும்பாலும் உங்களுக்கு ஆதரவாக தான் பதில் வரும். நீங்கள் வருகின்ற சமயத்திலே நான் அலுவலக வேலையாக வெளியூர் போகவேண்டி இருக்கும் என்று பதில் வந்தால் புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் போக வேண்டாம். வரவே வேண்டாம் என்று பதில் எழுதி போட்டார்கள் என்று நீங்கள் எப்பவுமே அவர்கள் வீட்டுப் பக்கம் தலை வைத்து படுக்க வேண்டாம் அது தான் மரியாதை. வாங்க என்று சொல்லி பதில் வந்து விட்டது என்று வையுங்கள்.உடனே அடுத்த கடிதத்தில் நீங்கள் எப்போது வரப் போகிறீர்கள். ரயிலிலா பேருந்திலா என்னும் விடயத்தை எழுதி விடுங்கள். நீங்கள் போகும் போது வெறுங்கையோடு போகாதீர்கள். உங்கள் ஊரில் என்ன விசேடமோ அது மாதிரியான தின்பண்டம், பழம் ஏதாவது வாங்கி கொண்டு போங்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு போகிறீர்கள் என்றால் என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கின்றீர்கள் என்று கேட்டால் அல்வா என்று சொல்லாதீர்கள். அது தான் அங்கேயே கிடைக்குமே அதற்கு என்னத்திற்கு நீங்கள் உங்களுக்கு வேண்டிய சோப்பு, சீப்பு, துணி, பற்தூரிகை போன்றவற்றை கையோட எடுத்து கொண்டு போய் விடுங்கள். அங்கே போய் சேவிங் செட் இருந்தால் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு நிற்காதீர்கள். போற இடத்திலே சுமூகமாக பழகுங்கள். அவர்களுக்கு தகுந்த மாதிரி அட்ஜஸ்ட் பண்ணுங்கள். அவர்கள் சாப்பிடும் போதே நீங்களும் சாப்பிடுங்கள். அவர்கள் தூங்கும்போதே நீங்களும் தூங்குங்கள். அவர்கள் தூங்கின பின்பு நீங்கள் எழும்பி சாப்பாடு போடு என்றால் நன்றாகவா இருக்கும். இன்னொரு தலையணை இருக்கிறதா என்று எல்லாம் கேட்டு விடாதீர்கள் ஏன் என்றால் எல்லாரின் வீட்டிலும் அது எல்லாம் இருக்காது.

உங்களின் துணிகளை நீங்களே துவையுங்கள். அவர்களின் வேலைக்காரரிடம் கொடுக்காதீர்கள். அவர்கள் சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு அதில் குற்றமும் சொல்லி கொண்டு இருக்காதீர்கள். நல்லா இருந்தால் நல்லா இருக்கிறது என்று சொல்லுங்கள். நீங்கள் உங்கள் குடும்பத்துடன் சுற்றுலா செல்லும் போது அவர்களையும் அழைத்துக் கொண்டு போங்கள். நீங்கள் பெண்ணாக இருந்தால் அவர்கள் வீட்டு பிள்ளைக்கு தலைமுடி பின்னிவிடுங்கள்.

விருந்தாளியாக ஒரு வீட்டிற்கு போகும் போது அவர்களிடம் கடன் கேட்டு கொண்டு நிக்காதீர்கள்.அது நன்றாக இருக்காது.

அவர்கள் வீட்டு மெத்தை சோபா இவற்றில் எல்லாம் உங்கள் குழந்தை ஏறி விளையாடுகிறது என்றால் அதுவும் சரியாக இருக்காது.இதையும் உங்கள் பிள்ளையிடம் சொல்லி வையுங்கள். இப்படி சில நுணுக்கமான விடயங்களை நீங்களும் கவனத்தில் வைத்துக் கொண்டால் அது உங்களுக்கும் நல்லது . அவர்களுக்கும் நல்லது. இவ்வளவு அட்வைசையும் கேட்டு ஒருதர் இன்னொருவர் வீட்டிற்கு விருந்தாளியாக போனார். ஒரு வாரம் தங்கி இருந்தார். வந்தவுடனே அவரை பார்த்து எப்படி இருந்தது என்று கேட்டேன். நீங்கள் சொன்னது மாதிரி இருந்தேன் நன்றாக இருந்தது என்றார்.

இருந்தாலும் வரும் போது செருப்பை தேடி தேடி பார்த்து அலுத்துப் போய்விட்டேன் என்றார்.பின்பு என்ன செய்தீர்கள் என்று கேட்டேன். என்னுடைய செருப்பையே போட்டுக் கொண்டு வந்துவிட்டேன் என்றார். இவரை என்ன சேர் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கே.சீ.சீ.சீ வெற்றிக்கிண்ணம்-2024

## டிறிபேக் ஸ்ரார் கால் இறுதிக்கு தகுதி

கே.சீ.சீ.சீ வெற்றிக் கிண்ணத் தொடரின் 15 ஆவது போட்டியில் டிறிபேக் ஸ்ரார் அணி, அரியாலை சென்றல் அணியை 8 இலக்குகளால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 23.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 107 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

நிரோஸன் 47, ஜெரோஸன்-16,தேனுஜன்-12 ஓட்டங்களையும் பந்து வீச்சில் டிறிபேக் ஸ்ரார் அணியை சார்ந்த பார்த்தீபன் 5.4 ஓவர்களில் 15 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளையும், றதீஸ் 5 ஓவர்களில் 22 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும், மைடிறிஜன் 3 ஓவர்களில் 10 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

108 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய டிறிபேக் ஸ்ரார் அணி 12.1 ஓவர்களில் 2 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

பிரவீன்-11, தசிந்தன்-46, சாகித்தியன் ஆட்டமிழக்காது 33, ஓட்டங்களையும் பந்து வீச்சில் அரியாலை சென்றல் அணியை சார்ந்த சின்தீபன், ஜனன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். (நி-6)

# வட மாகாண மல்யுத்த போட்டி






(நெளுக்குளம்)

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ்/ மந்திகையில் நடத்தப்பட்ட மாகாண மல்யுத்த போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட ஆண் கள், பெண்கள் அணியினர் தொட ர்ந்து 5வது தடவையாக முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தால் கடந்த சனிக்கிழமை யாழ். மந்திகையில் நடத்தப்பட்ட வடமாகாணமட்ட திறந்த மல்யுத்த போட்டியில் முல்லை மாவட்ட ஆண்கள் அணி 6 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை பெற்று முதலிடம், யாழ்.மாவட்டம் 2 தங்கம், 2 வெண்கலம், 4 வெள்ளி பதக்கங்களைப் பெற்று இரண்டாமிடம், வவுனியா மாவட்டம் 1 தங்கம், 1 வெள்ளி, வெண்கலம் பெற்று மூன்றாமிடம், மன்னார் மாவ ட்டம் 1 தங்கம், முல்லை மாவட்ட பெண்கள் அணி 10 தங்கம், 8 வெண்கலப் பதங்களைப் பெற்று முதல் இடத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3103

கபிலா




காசன்




விசால்




ஜானு




துரு




விதுனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 468





இந்தக் கப்பல்களிலிருந்து கலபதியின் கட்டளையை மீறிச் சென்ற மாலுமிகள் தங்களிடம் வந்தால் தாங்கள் அவர்களைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. உடனே சிறைப்படுத்தி அவர்களைத் தஞ்சைக்கு அனுப்ப வேண்டும்."

"இளவரசே! கலபதி கூறியதை மட்டுமே நாம் கேட்டோம். மாலுமிகளின் கட்சி என்னவென்று நாம் கேட்கவில்லை. ஒரு பக்கத்துப் பேச்சை மட்டும் கேட்டு எப்படித் தீர்மானிக்க முடியும்? அது நீதிக்கும் தர்மத்துக்கும் உகந்ததா? தாங்கள் என்னுடன் வாருங்கள். அந்த மாலுமிகள் வந்ததும் அவர்கள் சொல்வதையும் கேட்டு முடிவு செய்யுங்கள்."

"ஐயா! அது சாத்தியமில்லை. தங்கள் உசிதம் போல் செய்யுங்கள். நான் இனி ஒரு கணமும் இங்கே தாமதிக்க முடியாது. உடனே புறப்பட வேண்டும். படகுக்காரன் எங்கே?" என்று கேட்டார். "எங்கே புறப்பட வேண்டும், இளவரசே! படகுக்காரன் எதற்கு?"

"இதைப் பற்றித் தாங்கள் கேட்கவும் வேண்டுமா? வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பலுக்குத்தான் நானும் போக வேண்டும். அந்த வீராதி வீரன் எனக்காகவல்லவோ அராபியர் வசப்பட்ட கப்பலில் ஏறிப் பயங்கரமான அபாயத்துக்கு உள்ளாகியிருக்கிறான்? அவனை நான் கை விட்டு விடக்கூடுமா? ஏற்கெனவே நான் செய்துள்ள பாவங்கள் போதாதென்று சிநேகத் துரோகம் வேறு செய்ய வேண்டுமா?

"ஐயா! தாங்கள் ஒரு பாவமும் நான் அறிந்து செய்ததில்லை. தாங்கள் சொன்னாலும் உலகம் ஒப்புக் கொள்ளாது. வந்தியத்தேவன் வெறும் முரடன். முன் யோசனை சிறிதும் இல்லாதவன். அவனாக வருவித்துக் கொண்ட அபாயத்துக்குத் தாங்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்? இதில் சிநேகத்துரோகம் என்ன? இளவரசே! எங்கிருந்தோ தெறிகெட்டு வந்த ஒரு வாலிபனைத் தங்கள் சினேகிதன் என்று கொண்டாடுவதே எனக்குப் பிடிக்கவில்லை. சம நிலையில் உள்ளவர்கள் அல்லவோ சிநேகிதர்கள் ஆக முடியும்?"

"சேனாதிபதி! வீண் பேச்சில் காலங்கடத்த நான் விரும்பவில்லை. அவன் என் சிநேகிதன் இல்லாவிட்டாலும் நன்றி என்பதாக ஒன்று இருக்கிறதல்லவா? வள்ளுவர் முதல் பெரியோர்கள் அனைவரும் சொல்லியிருக்கிறார்களே? 'சோழ குலத்தார் நன்றி மறவாதவர்கள்' என்ற புகழ் என்னால் கெட்டுப் போக விடமாட்டேன். இந்த விநாடியே புறப்பட்டுச் சென்று அந்தக் கப்பலைத் தேடிப்பிடிப்பேன்."

"எப்படிப் புறப்படுவீர்கள், எங்கே தேடுவீர்கள் இளவரசே!" "நீங்கள் வந்த படகில் ஏறிக்கொண்டு புறப்படுவேன்." "முயலை வைத்துக் கொண்டு புலி வேட்டையாட முடியுமா? ஆழ்கடலில் செல்லும் மரக்கலத்தை இச்சிறிய படகில் ஏறித் துரத்திப் பிடிக்க முடியுமா? பிடித்த பிறகுதான் என்ன செய்வீர்கள்?"

"படகில் ஏறிப்போவேன், படகு உடைந்தால் மரக் கட்டையைப் பிடித்து நீந்திக்கொண்டு போவேன். வந்தியத்தேவனை ஏற்றிச் செல்லும் கப்பல் ஏழு கடல்களுக்கு அப்பால் சென்றாலும் அதைத் துரத்திக் கொண்டு போய்ப் பிடிப்பேன். பிடித்த பிறகு என் நண்பனைக் காப்பாற்ற முடியாவிட்டால் நானும் அவனோடு உயிரையாவது விடுவேன் படகுக்காரன் எங்கே?"

இவ்விதம் சொல்லிக் கொண்டே இளவரசர் நாலாபுறமும் திரும்பிப் பார்த்தார். படகுக்காரனுடன் ஒரு பக்கமாக நின்று பூங்குழலி பேசிக்கொண்டிருந்ததைக் கவனித்தார். அருகில் ஊமை மூதாட்டியும் நின்றாள். அவர்கள் இருந்த இடத்தை நோக்கி விரைந்து போனார்.

சமீபத்தில் சென்றதும் பூங்குழலி கண்ணில் நீர் ததும்ப அப்படகுக்காரனுடன் ஆத்திரமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தாள் என்று தெரிந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தானம் அளிப்பது சிறந்தது

(நேற்றைய தொடர்ச்சி...)

ஆண்டுகள் பல கடந்தன. அரசன் வழக்கம் போல் வேட்டைக்கு செல்கையில் எதிரே பெரிய செல்வர் ஒருவர் வருவதை கண்டான்.

மக்கள் அனைவரும் அவருக்கு மரியாதை அளித்தனர். அரசன் அந்தப் பெரியவரை தன் அரண்மனைக்கு அழைத்து வருமாறு காவலர்களை அனுப்பினான்.



அந்த பெரியவரும் அரசர் ஆணைக்கு கட்டுப்பட்டு பெரிதும் மகிழ்ந்து மன்னர் முன் வந்து நின்றார். அரசன் அந்த பெரியவரை பார்த்து, "ஐயா, பெரியவரே நீங்கள் யார்? உங்களுக்கு இந்த நாட்டு மக்கள் பெரிதும் மரியாதை கொடுக்கிறார்களே என்ன காரணம்?" என்று கேட்டார்.

உடனே அந்த பெரியவர் மன்னரை பார்த்து, "அரசே, என்னை தெரியவில்லையா? பல ஆண்டுகளுக்கு முன் உங்களிடம் அறிமுகமான விறகு வெட்டி நான்.

ஏழ்மையில் வாடுவதை கண்டு சந்தன காட்டை எனக்கு தானமாக வழங்கினீர்கள். நான் அந்த மரங்களை வெட்டி நல்ல விலைக்கு விற்று பெரும் பணக்காரன் ஆனேன்" என்றார்.

அரசருக்கு பெரும் மகிழ்ச்சி. பிறகு அவர் அந்த பெரியவரை பார்த்து, மக்கள் உங்களை பெரிதும் மதிப்பதற்கு காரணம் என்ன? என்று கேட்டார்.

அரசே, எனக்கு கிடைத்த பெரும் பணத்தில் நான் பல ஏழை எளியவர்கள் பயன்பெற பள்ளிக்கூடம், மருத்துவமனை கட்டி உள்ளேன். சிலர் சொந்த தொழில் தொடங்க பணம் கொடுத்து உதவியுள்ளேன்.

அதனால் தான் மக்கள் என் மேல் பேரன்பு செலுத்துகிறார்கள் என்றார். மன்னர் தான் செய்த தானம் எப்படி எல்லாம் நற்பயன்களை விளைவிக்கிறது என்று எண்ணி மனதிற்குள் மகிழ்ந்தான். அந்த பெரியவரையும் பாராட்டினார்.

நீதி: தானம் செய்வது சிறந்தது. நாம் ஒருவர் ஒருவருக்கு தானம் அளிப்பதால் அதனால் பலரும் பயன் படுகிறார்கள். எனவே, அனைவரும் தானம் செய்யும் நற்பண்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். *– யாரோ*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள மக்கள் யாரை ஆதரிப்பார்கள் என்பதை அறிக!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்ற கருத்து எழுகை பெற்றுள்ள அதேநேரம், பொதுவேட்பாளரை நியமிப்பதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை என்ற வாதமும் முனைப்புப் பெற்றுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பவர்கள்; தமிழ் மக்கள் தங்களின் உரிமையை வலியுறுத்துவதற்காக – சிங்கள ஆட்சியாளர்கள் எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு தர மறுத்ததன் காரணமாக – தமிழர்களின் அரசியல் தீர்வாக தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் எனத் தமது தரப்பு நியாயப் பாடுகளை முன்வைக்கின்றனர்.

அதேநேரம் பொது வேட்பாளரை நியமிக்கக்கூடாது எனக் கருதுகின்ற தமிழ்த் தரப்பினர், தமிழ் மக்கள் சார்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிக்கும்போது அவர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு இம்மியும் கிடையாது.

ஆக, வெற்றி பெறாத தேர்தலில் நின்று தோற்பதனூடாக எவ்வாறு நாம் சாதிக்க முடியும் என்ற கேள்வியை முன்வைக்கின்றனர்.

தவிர, தமிழர் சார்பில் பொதுவேட்பாளரை நியமிக்கும்போது, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுபவருடன் எதிர்காலத்தில் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கும் தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் முடியாமல் போகும்.

இதற்கும் மேலாக, இந்த நாட்டின் ஜனாதிபதி சிங்கள மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்றவர் என்ற நினைப்பும் முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களுடன் சேர்ந்து ஜனநாயகத்துக்குப் பங்காற்றியுள்ளனர் என்பதான கருத்தும் முகிழ்ப்படையும்.

இந்த நிலைமையானது கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சகோதரர்கள் செய்கின்ற ஆக்கிரமிப்புகளைக்கூட, எங்களால் தடுக்க முடியாமல் போகும்.

எனவே பொது வேட்பாளரை நிறுத்தாமல், சிங்களத் தரப்பில் தமிழ் மக்களுக்குச் சாதகமாகச் சிந்திக்கக்கூடிய வேட்பாளரை ஆதரிப்பதுதான் புத்திசாலித்தனமானதென வலியுறுத்துகின்றனர்.

இங்குதான் வாதமும் எதிர்வாதமும் தர்க்கித்து புனர்வாதத்தைப் பிரசவிக்கப் போகிறது.

புனர்வாதம்; வாதத்தை விட, எதிர்வாதத்தைவிட தர்க்க ரீதியான சான்றுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

இவ்வாறு கருத்தாழம் மிக்க புனர்வாதம் பரிணமிப்பதற்கு, வாதமும் எதிர்வாதமும் தத்தம் கருத்தை வலிமைப்படுத்தக் கூடியவாறு தரவுகளையும் ஆதாரங்களையும் முன்வைக்க வேண்டும்.

அவ்வாறாயின், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் யாரை ஆதரிப்பர் என்பதை அறிவது மிகவும் அவசியமாகும்.

# உரிமையாளரை தாக்கிவிட்டு ஊழியர் தப்பி ஓட்டம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரணைப்பாலை வீதி சிவநகர் பகுதியில் அமைந்துள்ள மரக்காலையில் பணிபுரியும் ஊழியரால் மரக்காலை உரிமையாளர் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மல்லிகைத்தீவினை சேர்ந்த மரக்காலை உரிமையாளர் வேலுப்பிள்ளை வரதகுமார் (35 வயது) யாழ். மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில் மரக்காலை உரிமையாளர் குறித்த இளைஞனை இரவு வேளை வேலை செய்யுமாறு கூறியிருந்தார். இளைஞன் தன்னால் வேலை செய்ய முடியாது என தெரிவித்தமைக்கு உரிமையாளர் குறித்த இளைஞனை வெளியில் போகுமாறு அனுப்பியுள்ளார். பின்னர் குறித்த இளைஞன் அதிகாலை மரக்காலைக்குள் மதுபோதையில் புகுந்து உறங்கிக் கொண்டிருந்த உரிமையாளர் மீது தாக்குதலை நடத்திவிட்டு அங்கிருந்த ஏனையவர்களை எழுப்பி உரிமையாளரை தாக்கிவிட்டேன் மருத்துவமனைக்கு அழைத்து செல்லுங்கள் என சொல்லிவிட்டு தப்பித்து சென்றுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்து அதிரடியாக செயற்பட்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். ஹெரத் தலைமையிலான குழு சிலாவத்தை பகுதியில் வைத்து சந்தேக நபரை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த நபர் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனாவார். இவருக்கு உடந்தையாக இருந்த இளைஞர் ஒருவரையும் பொலிஸார் தேடி வருவதோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-299)

# சட்டவிரோதமாக பதுக்கி வைத்த பாலை, முதிரை மரக்குற்றிகள் மீட்பு

## இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பாலை மற்றும் முதிரைக் குற்றிகள் சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை யாழ். மாவட்ட வனவள பாதுகாப்புத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து முதிரை மற்றும் பாலை மரத்தீராந்திகள் சட்டவிரோதமான முறையில் வெட்டப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய மாவட்ட வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குறித்த பகுதியில் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போதே கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 30 முதிரை மரக்குற்றிகள் மற்றும் 33 பாலை மரத்தீராந்திகளுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர். இந் நபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதி வான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞன் கைது

(குருமன்காடு)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் 70 போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் திடீர் சோதனை முன்னெடுக்கப்பட்ட போது அப்பகுதியில் உள்ள சிறிய கடை ஒன்றில் வைத்து போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா கலந்த மாவா விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப் பட்டது. இதன்போது குறித்த கடையில் இருந்து 70 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் கஞ்சா கலந்த மாவாவும் மீட்கப்பட்டுள்ளது.

மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (நி-6-250)

# மரமுந்திரிகை நுழைவாயில் கதவுகள் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் மரமுந்திரிகை செயற் திட்டத்தின் பொது நுழைவாயில் கதவுகள் நேற்று முன்தினம் திருடப்பட்டுள்ளன.

நாகர்கோவில் மேற்கு ஜே/424 கிராம சேவையாளர் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மரமுந்திரிகை பயிர்ச் செய்கை திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது. அத்திட்டத்தின் கீழ் முப்பது ஏக்கர் நிலப்பரப்பை சீர் செய்து தூண், முட்கம்பிகள் கொண்டு வேலி அமைக்கப்பட்டு முப்பது பேருக்கும் பிரிக்கப்பட்டு முப்பது கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இந்த திட்டத்திற்காக வீதியமைப்பதற்கான ஒழுங்கைகள் இடப்பட்டு முப்பது காணிகளையும் இணைப்பதற்காக பொதுவாக ஒரு நுழைவாயில் அமைக்கப்பட்டிருந்த நிலையில் அந்நுழைவாயில் கதவு நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை நாகர் கோவில் பகுதியில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதால் தமது உடமைகளை பாதுகாத்து தருமாறும் நாகர் கோவில் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-60)

# இலங்கையில் 10 சதவீதமானோர் சிறுநீரக நோயினால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் 10 சதவீதமானோர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறுநீரக நோயாளர் சங்கத்தின் பிரதம வைத்தியர் சஞ்சய ஹெய்யன்துடுவ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு நீரிழிவு நோயே பிரதான காரணியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது நாட்டில் சுமார் 10 சத வீதமானோர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நம் நாட்டில் சிறுநீரகத்தைப் பாதிக்கும் முக்கிய காரணியாக சர்க்கரை நோய் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணிப் புறக்கணிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து நேற்று பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்து மற்றும் காகிதாதிகள் உள்ளிட்டவற்றை வழங்காமைக்கான உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரியே அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் மே 6 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சகல சேவைகளில் இருந்தும் விலகிக் கொள்ளவுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் அனுராத செனவிரத்ன தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

## பகுதி IV

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

21

ஆங்கிலேயர், இலங்கையில் அன்று நிலவிய அடிமை முறையினையும் நீக்கினர். புராதன காலந்தொட்டு இலங்கையிலும் ஒரு வித அடிமை முறை இருந்து வந்துள்ளது ஆனால் அம்முறையின் இன்னல்கள் மேற்குலகில் நிலவிய அடிமை முறையைப் போன்று கொடூரங்கள் நிறைந்தவையல்ல. இந்நாட்டில் நான்கு விதமான அடிமைகள் இருந்தனர்.

1. கடனிறுக்க முடியாதவர்கள், தம்மைக் கடன் கொடுத்தவருக்கு அடிமையாக்கினர்.

2. பெற்றோர், பிள்ளைகளை அடிமைகளாக விற்றனர்.

3. அரசன் சிலரை அடிமைகளெனத் தண்டித்தான்.

4. அடிமையாகவிருந்த ஒரு தாயின் குழந்தைகளும் அடிமைகளாயினர்.

இவ்வடிமைகள், தம் எசமானுக்குக் குறிப்பிட்ட சேவைகளைச் செய்ய கடமைப்பட்டதைத் தவிர்ந்த ஏனைய கட்டுப்பாடுகள் அவர்கள் மேல் விதிக்கப்படவில்லை. அவர்கள் பெரும்பாலும் எசமானர்களின் வீட்டு வேலைக்காரராகவும் நிலபுலங்களில் வேலையாட்களாகவும் சேவை செய்தனர்.

தமிழ்ப் பிரதேசங்களில் கோவியர், நளவர், பள்ளர் எனும் மூன்று சாதி மக்களும் அடிமைகள் போன்று பாவிக்கப்பட்டனர். கோவியர் வீட்டு வேலைக்கும் மற்றைய இரு சாதியினரும் விவசாய வேலைகளுக்கும்பயன்படுத்தப்பட்டனர். ஆள்பதிகளின் முயற்சிகளினால் இவ்வடிமைகள் பலருக்கு சுதந்திரம் பெற்றுத் தரப்பட்டது.

### கல்வியும் சமயமும்

இலங்கையைச் சிங்கள முடி வேந்தர் ஆட்சி செய்த பண்டைக் காலத்தில், பௌத்த பிக்குகள் சங்கம் கல்விக்குப் பொறுப்பேற்று நடாத்தி வந்தது. அரசன், கிராமங்கள் தோறும் பாடசாலைகளை நிறுவி, அவற்றுக்குப் பொறுப்பாக பௌத்த பிக்குகளையே அமர்த்தினான். அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து எவ்வித சன்மானமும் ஏற்கக் கூடாதென்றும், பிக்குகளின் பராமரிப்புக்கு வேண்டிய உதவிகளைத் தாமே செய்து வைப்பதாகவும் அரசன் கட்டளையிட்டான்.

சிங்கள அரசர்களின் ஆட்சி மறையவே, இப் பாடசாலை முறையும் அவர்களுடன் மறைந்து போகலாயிற்று. கரையோர மாநிலங்களைக் கைப்பற்றிய மேற்கத்தேய வல்லரசுகள் 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம், சமய அடிப்படையில் பாடசாலைகளை நிறுவி வந்தன.

போர்த்துக்கேயர், றோமன் கத்தோலிக்க மதத்தைப் போதிக்கும் நோக்கமாக பாடசாலைகளை ஏற்படுத்தினார். ஒல்லாந்தர், கிராமங்களைக் கோவிற்பற்றுக்களாகப் பிரித்து ஒவ்வொரு கோயிற் பற்றிலும் பாடசாலையொன்றினை நிறுவி, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தை வற்புறுத்தி வரலாயினர்.

பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் சென்னை அரசாங்கம், தன் அவதானத்தை கரையோர மாநிலங்களை வெற்றி கொள்வதற்குச் செலவிட்ட பணத்தை அறவிடுவதில் செலுத்தியதேயன்றி, நாட்டு மக்களின் கல்வியிலும் கிறிஸ்தவ சமய போதனையிலும் கவலை கொள்ளவில்லை.

அவர்கள், ஒல்லாந்தர் நிறுவியிருந்த பாடசாலைகளைச் சீரழிந்து போக விட்டனர். 1799 இல் ஆள்பதி நோத், ஒல்லாந்தரின் பாடசாலைகளைப் புதுப்பித்து வண. ஜேம்ஸ்கோடினர் என்பவரை பாடசாலைகளுக்கு முகாமையாளராக நியமித்தார். பாடசாலைகளின் நிர்வாகத்துக்கு நன்கொடைகள் வழங்கினார். இதன் பயனாக 163 சுய மொழிப் பாடசாலைகளும், ஆட்டுப்பட்டித் தெருவில் ஓர் ஆங்கிலப் பாடசாலையும் திறக்கப்பட்டன.

ஆனால் பாடசாலைகளுக்கு பொறுப்பாகவிருந்த வண. ஜேம்ஸ் கோடினர் பதவியினின்று நீங்கியவுடன் அரசாங்கம், நன்கொடை வழங்கும் முறையை நிறுத்தவே பாடசாலைகள் மூடப்பட்டன. ஆள்பதி மெயிற்லந்து 17 பாடசாலைகளை மீண்டும் திறப்பித்தார். எனினும் அரசாங்கப் பாடசாலைகள் திருப்தியற்றனவாகவும் திறமை குறைந்தனவாகவும் காணப்பட்டன.

1829 இல் இருந்த 90 பாடசாலைகளுள் தமிழ் மாகாணங்களில் நான்கும், கண்டிப் பிரதேசத்தில் ஒன்றுமில்லாதுமிருந்தன. பல பாடசாலைகள் பெயரளவில் மாத்திரமே இருந்தன. அவை பரிசோதனைகளுக்கு மாத்திரமே பிள்ளைகளை ஒன்று சேர்த்தன.

இவ்விடைக்காலத்தில் அரசாங்கப் பாடசாலைகளின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில், பல கிறிஸ்தவ போதக சபைகள் திறமையுடன் பல பாடசாலைகளை நடாத்தி வந்தன. 1812 இல் பப்ரிஸ்ற் சபையும், 1814 இல் வெஸ்லியன் சபையும், 1816 இல் அமெரிக்கன் சபையினரும் பாடசாலைகளைத் தாபித்தனர்.

1818 இல் சேச் மிஷனரிச் சபையும் பாடசாலைகளைத் திறந்தது. இப்புரட்டஸ்தாந்து சபைகளுக்கு, அரசாங்கம் ஆதரவையும் பண உதவியையும், பாடசாலைகளை அமைக்க நிலங்களையும் கொடுத்து, விசேட சலுகைகளைக் காட்டிற்று. அவர்கள் 1812 இற்கும் 1832 இற்குமிடையில் நாட்டின் பல பாகங்களிலும் 215இற்கு மேற்பட்ட பாடசாலைகளை நிறுவி, 10,000 பிள்ளைகளுக்குச் சமயத்தையும் கல்வியையும் போதித்துவந்தனர்.

கோட்டையிலும், வட்டுக்கோட்டையிலும் உயர் பாடசாலைகளை நிறுவி மிகவும் உயர்ந்த தரமுடைய கல்வியை ஊட்டி வந்தனர். கத்தோலிக்கர் அரசாங்கத்திடம் உதவிபெற்றிருந்தும் 1831 அளவில் 63 சுய மொழிப் பாடசாலைகளை நடாத்தி வந்தனர். பௌத்த, சைவ, சமயத்தவர்களுக்குப் பாடசாலைகள் ஒன்று மேயிருக்கவில்லை.

இவ்விதமாக 1830 இல் இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகள், புரட்டஸ்தாந்து சமயப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என மூவித பாடசாலைகளிருந்தன. கத்தோலிக்கரினது பாடசாலைகள் தனியார் பாடசாலைகளெனக் கணிக்கப்பட்டன.

ஒல்லாந்தர், தமது ஆட்சிக் காலத்தில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் ஆதரவளித்து, பிற சமயத்தவர்களான பௌத்தர்கள், இந்துக்கள், விசேடமாக முஸ்லீம்கள், றோமன் கத்தோலிக்கர் என்பவர்களுக்குச் சமய வழிபாட்டுச் சுதந்திரத்தை மறுத்தனர்.

புரட்டஸ்தாந்தருக்கு அனுமதிக்கப்பட்ட பல உரிமைகள் மற்றச் சமயத்தவர்களுக்கு மறுக்கப்பட்டன. பிரித்தானியர் ஆரம்பந் தொட்டு எல்லாச் சமயத்தினருக்கும் வழிபாட்டுச் சுதந்திரத்தை அனுமதித்தனர். மெயிற்லாந்து, 1806 இல் றோமன். கத்தோலிக்கருக்கு உரிமைகளை மறுத்த சட்டங்களை நீக்கி, அவர்களுக்குச் சகலகுடியியல் உரிமைகளையும் பெற்றுத் தந்தார்.

1820: யாழ்ப்பாணத்தில் தமிழ் அச்சகம் நிறுவப்பட்டது. 1823: ஆசியாவிலேயே முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிஷன் பெண்கள் பள்ளியை நிறுவியது.

1827- "மக்கள் தொகை1824" ஆனது திருகோணமலையின் மக்கள் தொகை புள்ளி விவரங்களை 19 158 எனவழங்குகிறது, அவர்களில்317 சிங்களவர்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 483, பெரும்பான்மையான முக்குவர், மூர்மற்றும்"பெல்லாலே" மன்னாரின் கீழ் கணக்கிடப்பட்ட வன்னியில் 22 536 மக்கள் வசித்தனர், அவர்களில் 517 சிங்களவர்கள்.

1829: யாழ்ப்பாணத்தில் புராட்டஸ்தாந்துகளுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இக்கால கட்டத்தில் (1796-1830 வரையில்) பல வகையான நாணயக்குத்திகளும் நாணயத்தாள்களும் பிரித்தானியரால் இலங்கையில் பயன்படுத்தப்பட்டது. இதுபற்றி இனிவரும் பகுதியில் பார்ப்போம்.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவத்...

எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிற்குட்பட்ட மட்டுவில் நாடு கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் ஏற்கெனவே இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள 21 குடும்பங்களுக்கு சொந்தமான காணிகள் இராணுவத்தின் தேவைக்கு என சுவீகரிப்பதற்கான நில அளவை மேற்கொள்வதற்கு நேற்று நிலஅளவை திணைக்கள அதிகாரிகள் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்

இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் கூடியிருந்த காணி உரிமையாளர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் அளவீடு செய்வதை நிறுத்துமாறு ஆட்சேபனை தெரிவித்து கடிதங்களை வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த அளவீட்டுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் காணி உரிமையாளர்களால் குறித்த காணிகளை மீட்டுத் தருமாறு கோரி பூநகரி பொலிஸ் நிலையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் சென்று முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,315)

## மின்னல்...

யைச் சேர்ந்த முன்னாள் போராளியான மூன்று பிள்ளைகளின் தந்தையான காளிமுத்துசண்முகராஜா (வயது-49) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதுடன், ஐயங்கன்குளம் புத்துவெட்டுவான் பகுதியைச் சேர்ந்த மகேந்திரன் பிரபாகரன் (வயது-26) என்ற இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை ஐயங்கன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,315)

## ஈழவேந்தன்...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கவாசகர் கனகசபாபதி ஈழவேந்தன் (வயது-91) கனடாவில் நேற்று காலமானார் .

கனகேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட ஈழவேந்தன் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் பின்னர் கொழும்பு வெஸ்லி கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

தமிழீழக் கொள்கையில் மிகவும் பிடிப்புள்ளவராக இருந்த இவர் தனது பெயரை ஈழவேந்தன் என மாற்றிக் கொண்டதோடு தமிழ் மொழியிலேயே கையெழுத்தும் இட்டு வந்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றிய கனகேந்திரன், பின்னர் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி 1980ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

2004 பாராளுமன்றத் தேர்தலில் ஈழவேந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டு பாராளுமன்றம் சென்றார்.

இலங்கையிலிருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்த ஈழவேந்தன் நேற்றுக் காலமானார். (ம-7,10)

## முல்லைத்தீவைச்...

ஏற்பட்ட சந்தேகத்தினால் அவர்களை விமான நிலையத்தில் உள்ள குடிவரவுத் திணைக்களத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப சோதனையின்போது அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானவை என உறுதி செய்யப்பட்டுள்ளது. பின்னர் குறித்த அதிகாரிகள் சிறுவனை, தனியே அழைத்துச்சென்று இவ்விடயம் தொடர்பில் விசாரித்த போது, இது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கூறியுள்ளதுடன், உண்மையான தாய் கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் காத்திருப்பதாகவும் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, உடனடியாகச் செயற்பட்ட அதிகாரிகள், அவரது தாயாரை தேடி கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டபோது, இலங்கையில் தற்போது நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியினால் தனது குடும்பம் கடும் இன்னல்களுக்கு உள்ளாகி உள்ளதாகவும் அதனால் மகனின் நலன் கருதி, இவ்வாறு வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க முயற்சித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்கள் இருவரும் முல்லைத்தீவு பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களை மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலும் இந்த விசாரணைகளின் போது, இங்கிலாந்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது மனைவி மற்றும் மகனின் தகவல்களை வைத்து வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களை தயார் செய்து இவர்களை இலங்கையில் இருந்து இங்கிலாந்துக்கு அழைத்து சென்று ஆள் கடத்தல் தொழில் நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## மது...

வவுனியாதலைமைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்து பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்த போது ஏ9 வீதியால் பயணித்த தனியார் பேருந்து ஒன்றின் சாரதி மது போதையில் பேருந்தை செலுத்தியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ம-7,10,250)

## நாயாறு...

கடலில் குளிக்கச் சென்றுள்ளனர்.

இதன் போது ஒரு இளைஞனை கடல் நீர் இழுத்துச் சென்றுள்ளதைத் தொடர்ந்து காப்பாற்ற முற்பட்ட மற்றொருவர் நீரில் மூழ்கியுள்ளார்.

நாயாறு கடற்படையினரின் உதவியுடன் ஒரு இளைஞன் உயிருடன் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதுடன் மற்றைய நபர் கடலில் மூழ்கிய நிலையில் அவரைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில் சடலம் நேற்று கரை ஒதுங்கியுள்ளது.

விசாரணைகளை முல்லைத் தீவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(ம-7,10,299)

## முல்லை...

இந்த மாடுகளை ஏற்றிச் செல்வதாகவும், பொலநறுவையில் உள்ள அரிசி ஆலைகளுக்கு நெல் கொண்டு செல்லும் போர்வையில் பக்க வீதிகளை பயன்படுத்தி மாடுகளை ஏற்றிச் செல்வதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இரண்டு லொறிகளில் இருந்த பசுக்களில் பெரும்பாலானவை கருவுற்ற பசுக்கள் என்றும், சில மாடுகள் நோய்வாய்ப்பட்டவை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10,250)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.04.29
சீட்டிழுப்பு இலக்கம் 5460
K 3 7 6 6 7 1
அத சம்பத K 6 6 7 1
சீட்டிழுப்பு இலக்கம் 35
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1490
F 04 37 53 81 F
Double Chance 10168

மெகா பவர்
திகதி 29/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1808
O 20 26 37 68 71
88411

லக்கி 7 VIP
திகதி 2024.04.29
சீட்டிழுப்பு இலக்கம் 0286
D 6 8 4 7 5 0 D

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3702
சீட்டிழுப்பு திகதி 29.04.2024
T 16 45 61 76
T 26612

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.29
சீட்டிழுப்பு இலக்கம் 0769
கடகம் 11 19 59 60 கடகம்
87390 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
29.04.2024 வெற்றி வாரம் 168 வர்ணம் ஊதா
X 5 0 9 1 3 7
L 81731
ரூ. 21,346,688.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2434 வர்ணம் ஊதா சீட்டிழுப்பு திகதி 29.04.2024 தினம் திங்கள்
12 25 45 54 U
28549
ரூ. 85,710,171.20

சனிதா
திகதி 2024.04.29 வெற்றி வாரம் 4595 வர்ணம் இளம் நீலம்
05 22 26 39 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,279,753.20
76083

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4146 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.29 தினம் திங்கட்கிழமை
29 37 38 48 சிம்மம்
ரூ. 6,151,497.20
889121

கப்ருக
R 19 02 17 37 66
1610 பச்சை 29.04.2024 திங்கள்
434880
519,921,976.20

ஜயோதா Jayoda
திகதி 2024.04.29 வெற்றி வாரம் 2020 வர்ணம் செம்மஞ்சள்
15 16 42 43 N
ரூ.23,186,902.00
79600

திங்கட்கிழமை
வெற்றி வாரம் 2260
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2024.04.29
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.109,345,708/-
ADA KOTIPATHI
03 26 51 68 R
602994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0235) 076 825 7716 (ஆகாஸ்)



**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- சமையலாளர் - Cook
- சமையலறை உதவியாளர் - Kitchen Helper
- யாழ்ப்பாண வகை சமையலாளர் - Jaffna Style Cook
- விருந்தினர் விடுதி பராமரிப்பாளர் - House keeping Assistant

- அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
- உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
- தங்களது சுயவிபரக் கோவையை 06.05.2024 இற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க்காணும் முகவரிக்கு/ மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு - 021 720 0707/ 077 470 5759/ 077 343 8373

info@tilkohotels.com

Tilko Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna. (610)


## மயங்கி விழுந்தவர்...

துள்ளார்.

காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கொழும்பு கொட்டகனை பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தோபர் சுரேந்திரன் வில்சன் (வயது - 65) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் நண்பர் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் அவரது வீடு காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரிக்கு அருகாமையில் உள்ளது.

குறித்த வீட்டில் வேலை செய்வதற்காக உயிரிழந்த நபரும் அவரது நண்பரும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது குறித்த நபர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. (ம-7,10)

## ஸ்ரீலங்கா சுதந்திர...

குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மீள கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவே உள்ளேன்.

வீழ்ச்சியடைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மீள கட்டியெழுப்புவதற்கு சில காலம் தேவைப்படுகின்றது என தெரிவித்துள்ளார். (ம-7,10)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி. சிவானி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஓய்வு நிலை உப அதிபர் ப.பரமலிங்கம், ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி. செந்தில்நாயகி பரமலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக கனகசபாபதி விசாகரட்ணம், திருமதி. சுகிர்தா பாலமுரளிதரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக முன்னாள் ஆசிரியர்கள் திருமதி ம.தர்மநாதன், திருமதி ச.சிறினிவாசன், திருமதி ச.பிரபாகரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ம)


**வாகனம் வாடகைக்கு**

சேல்ஸ் வாகனம் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: (603)

077 925 4050



**CANADA VISA**

- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம், 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம். (511)

021 222 5686
076 424 7111

Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.



**வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (551)

074 17 37 684



**வீட்டுப் பணிப்பெண் தேவை**

பொற்பதி - கொக்குவில் பகுதியில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலை மற்றும் சமையல் வேலை செய்யக் கூடிய 35 - 50 வயதுடைய பணிப்பெண் தேவை. (607)

071 894 9131



**வீடு விற்பனைக்கு**


சுண்டிக்குளி, பாண்டியன்தாழ்வு வீதியில் 3 1/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: (606)

070 382 4074


# மரண அறிவித்தல்

## திரு. நடராசா முருகப்பன்



தோற்றம் : 15.04.1934 மறைவு : 27.04.2024

யாழ். கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் இந்தியா, கனடா Markham ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முருகப்பன் (வயது-90) அவர்கள் 27-04-2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பன் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற லட்சுமிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும் பாமதி, முகுந்தன், சுகந்தன், ஜெயந்தன், நிஷாந்தன், சதீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா(நடா), கௌசலா (கௌசி), வாசுகி(பேபி), புஷ்பாதேவி(புஷ்பா), யசிகலா(யசி), தாருகா(ரூபி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கந்தப்பு, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுகிர்தன், சுஜேத்திரா, தரணீசன், வசீகரன், யுகேன், அனிஷா, நிதுஷா, சங்கீத், நவீன், லக்ஷன், ஷோபிதா, திவிஷான், அந்திகா, கயல், சர்வின், மயாரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆதியா, கார்த்திகேயன், ஜேனா, வீரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான பார்வதி - சிவகுரு மற்றும் செல்லம்மா, காலஞ்சென்ற புவனேந்திரன் மற்றும் பாக்கியம், வைரமுத்து, தங்கமணி கணேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி.ப 5.00 மணி தொடக்கம் 9.00 மணிவரை பார்வைக்காக Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை காலை 8.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை இடம்பெற்று தகனக் கிரியைக்காக காலை 11.00 மணியளவில் Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, LOH 1G0, Canada இற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| நடராசா(நடா) - மருமகன்(கனடா) | :+14164745353 |
| முகுந்தன் - மகன்(கனடா) | :+16475342173 |
| சுகந்தன் - மகன்(கனடா) | :+16477125311 |
| ஜெயந்தன் - மகன்(கனடா) | :+16472824456 |
| நிஷாந்தன் - மகன்(கனடா) | :+16477608172 |
| சதீசன் - மகன்(கனடா) | :+16477013967 |

தகவல்:
குடும்பத்தினர்

(C-0234)


**V2 VISA SERVICES**
**கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0237)



**உடனடி வேலை வாய்ப்புக்கள்**

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0237)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



**Jaffna Organics Farmers Company LTD** (Reg No-PB00273052)

**வியாபார அபிவிருத்தி முகாமையாளர் பதவி வெற்றிடம்**

கல்வித் தகைமை :

- க.பொ.த உயர்தர வர்த்தகப்பிரிவில் பூரண சித்தியடைந்திருத்தல்.
- வியாபாரம் தொடர்பான பட்டப்படிப்புகள் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

- ஒரு வருட கால துறைசார் அனுபவம்.
- கணனி அறிவு கட்டாயம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கில அறிவு கட்டாயம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- வயது எல்லை 25 - 50
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- வாகன சாரதி அனுமதிப் பத்திரம் அவசியம்.
- யாழ். மாவட்டத்தில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

08.05.2024 ஆம் திகதிக்கு முன்னதாக உங்கள் சுயவிபரக்கோவையை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

jaffnaorganicsfarmerscompany@gmail.com

இராச வீதி,
நிலாவரை சந்தி,
சிறுப்பிட்டி மேற்கு. (609)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.